
கன்னியாகுமரி மான்மியம்



KMM0583

தேவஸ்தான வெளியீடு

கன்னியா குமரி மான்மியம்

2777

ஆசிரியர் :

வித்துவான் திரு. சு. உமைதாணுப்பிள்ளை

தேரூர்.

அணிந்துரை :

திரு. A. உத்தண்டராமன் I.A.S.

ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

தேவஸ்தான வெளியீடு

(1961)

விலை ரூ. 1—00

முதற் பதிப்பு 1961 — 3000 பிரதிகள்

இந் நூல்
சென்னை, கிடங்குத் தெரு,
ஸ்ரீ பாலசுப்ரமணியம் கம்பெனியாரின்
பன்னீர் டிரஸ்ட்டு பண உதவியால்
வெளியிடப்பெற்றது.

கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் அவுஸ்,
46, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.

கன்னியாகுமரி தேவஸ்வக் குழுவினர்

தலைவர் :

திரு. K. M. பூதலிங்கம் பிள்ளை, B.A.B.L.,

உறுப்பினர்கள் :

திரு. R. N. கிருஷ்ணசுவாமி அய்யர், B.A.B.L.,

திரு. A. பிரம்மானந்தசுவாமி நாடார்

நிர்வாக மானேஜர் :

திரு. C. M. பெருமாள்

இந் நூல் சென்னை குகஸ்ரீ ரஸபதி அவர்களால் பார்வையிடப் பெற்றது.

கன்னியாகுமரி தேவஸ்தான
வெளியீடு
1961

அணிந்துரை

திரு அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

'காசி முதல் கன்னியாகுமரி வரை' என்று நம்முடைய நாட்டில் ஒரு வழக்குண்டு. கன்னியாகுமரி பாரத நாட்டின் தென்கோடியில் இருக்கிறது; தமிழ்கூறும் நல்லுலகத்திற்குத் தெற்கெல்லையாகவும் இருக்கிறது. குமரி முனை, குமரிநாடு, குமரிக்கண்டம், குமரியாறு, குமரிக் கோடு, குமரித்துறை என்று பலவகையில் கொண்டாடப் பெறுவதற்கு அங்கு எழுந்தருளியுள்ள குமரித்தெய்வமே காரணம். 'குமரியொடு வட இமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதன்' என்று தமிழ் மன்னன் போற்றப்படுகிறான். பாண்டிய மன்னனைக் 'குமரித் துறைவன்' என்றும், சோழ அரசனைக் 'குமரிக்கொண்கன்' என்றும் கூறப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் 'கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி' என்று கூறுவதில் காவிரியைப்போலவே குமரியும் சோழனுக்குரியது என்று பாராட்டப் பெறுகிறது. 'குமரியம் பெருந்துறை' என்றும் குறிப்பிடப்படுகிறது. பாரதியாரும் 'நீலத்திரைக்கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரி' என்று பாடியுள்ளார். மணிமேகலையிலும் குமரியைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அப்பர் சுவாமிகள்,

"கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
பொங்கு நீர்க் குமரித்துறை யாடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே"

என்று குமரியைக் கங்கையுடன் ஒப்பிட்டுரைக்கிறார்.

அங்கு எழுந்தருளியுள்ள தேவியை, குமரி, கன்னி, பகவதி என்ற திருப் பெயர்களால் அழைப்பர். ஏசுநாதரின் தாயாரான கன்னிமேரி என்ற பெயர்தான் கன்னியாகுமரி ஆயிற்று என்று சிலர் கூறுகின்றனர். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே வாழ்ந்த எரடாஸ்தெனிஸ் என்ற கிரேக்கர் கி. மு. 276-ல் குமரியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். மேலும், மேரி, மாரியாகி, குமாரியாகி குமரியாகத் திரிந்தது என்று கூறுவது சற்றும் பொருந்தாது. ஆயினும் இக்கூற்று அம்பிகையின் பெருமையையும் புகழையும் எல்லா மக்களும் அறிந்து போற்றுவதையே காட்டுகிறது.

பகவதி கோயிலில் ஐம்பது கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை, இராஜராஜசோழன் 1, இராஜேந்திர சோழன் 1, இராஜாதிராஜன் 1, இவர்களின் காலத்தவை. கோயிலின் பெயரை அவைகள் "கன்னியா பகவதியார் கோயில்", 'கன்னியா பட்டாரியார்கோயில்' என்று குறிக்கின்றன. அம்மை தென்னவர்தம் குலதெய்வம் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். இந்த கோயிலைப் பற்றிய வரலாறு ஒன்றை 'குமரிமான்மியம்' என்ற பெயரில் வித்துவான் திரு. சு. உமைதாணுப் பிள்ளை எழுதியிருக்கிறார். அதற்கு அரியதொரு ஆராய்ச்சி முன்னுரையும் அவரே வரைந்திருக்கிறார். இந்நூலைக் கன்னியாகுமரி தேவஸ்வக் குழுவினர் வெளியிட முன்வந்தது பெரிதும் போற்றத் தக்கது. இவ்வரிய நூலை அழகாகவும் செம்மையாகவும் அச்சிட்டு வெளியிட ஸ்ரீ பாலசுப்பிரமணியம் கம்பெனியாரின் பன்னீர் டிரஸ்ட்டு நிதிவுதவியாலும் இன்னும் பல திருத்தலங்களில் விளக்கிட்டு மெய்ந்நெறி ஞானம் பெற்றதுடன் தலபுராணங்களும் வழிபாட்டு நூல்களும் வெளியிடப் பேருதவி புரிந்துள்ளனர். அன்னார் முயற்சியாலும் பொருளுதவியாலுமே இந்நூல் வெளிவருகிறது. அவர்களுக்கும் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. சைவ உலகமும் தமிழகமும் நூலாசிரியர்க்கு நன்றி செலுத்தும் கடப்பாடுடையது.

மூவிலை நெடுவேல் ஆதி வானவன்
இடமருங்கு ஒளிக்கும் இமயக் கிழவி
தனிக்கண் விளங்கும் நுதற்பிறை மேலோர்
மிகைப்பிறை கதுப்பிற் சூடி வளைக்கையின்
வாள்பிடித்து ஆளி ஏறித் தானவன்
மாளக் கடும்போர் கடந்த குமரி
மூவா மெல்லடித் திருநிழல்
வாழி காக்க இம் மலர்தலை உலகே.

பகவதி தேவியின் பதமலர் வாழ்க!

வாழி குமரியம்மன் குவளைக் கண்கள்.
குவலய மெல்லாம் பரவுக அம்மையின் கருணைப்
[பெருவெள்ளம் !!
போற்றி கன்னியம்மையின் கமலபொற் பாதம் !!!

௨

சென்னை
குகஸ்ரீ ரஸபதி குறிப்பு

உள்ளத்தாள். ஓங்கும் உலகத்தாள். பேரின்ப வெள்ளத்தாள், ஆன பெருமாட்டி, கனிவுடன் உயிர்களைக் காக்க என்றும் கன்னியாகி யிருக்கின்றாள்.

"பவன் பிரம்மசாரி யாகும்
பால்மொழி கன்னி யாகும்"

என்று, சிவஞான சித்தியார் சிவ தம்பதிகளைச் சிந்திக்கச் செய்கிறது.

"சராசரங்கள் ஈன்றும், தாழாக்
கொங்கையல்கன் மலர்க்கூந்தல் குமரி"

என்று, பரஞ்சோதி முனிவர் தேவியைக் குறித்துப் பாடுகின்றார்.

ஆழ்கடலில் அவுணர்கள், அளவிலராயுளர். வீணர்கள் அவர்கள் வெளிப்பட்டு வேதனையை மக்கட்கு விளைவியாதபடி, அம்பிகை அரிய கங்கை ஆயினள். ஆயிர முகமாகிக் கீழ்க்கடலில் கலந்து ஆரவாரம் செய்கிறாள். அந்த அதிர்ச்சியில் அவுணர்கள் அடங்கி ஒடுங்கினர்.

மேற்குக் கடற்கரையில், கம்பீர நரசிங்கத்தைக் காவல் வைத்தாள்.

வட திசையில் உள்ள கோலம் சிறந்த கோகரணத்தில், மாபலேசுரரை என்றும் காவல் இரும் என்றாள்.

அறிவின் உயர்ந்த அனுமப் பெரியனை, மயேந்திரத்து இருத்தி, கண்ணும் கருத்துமாகிக் கா! என்றாள்.

காசியில் விசாலாட்சி, அன்ன பூரணியாகிக் காக்கின்றாள்.

ஆளுமே பெண்மை யரசு என்று அறிந்து தீயோர் அடங்குமாறு, மதுரையில் மீனாட்சி மகாராணி ஆயினள்.

பனிமலை உச்சியிற் பாலகியாகி, சிவனார் இடத்திற் சிவையானள். திருமால் இடத்தில் திருவானள். கமலன் நாவிற் கலைவாணி.

தன் திண்மை பொன்மையை மண்ணிற் காட்டினள். நீரிற் சுவையாய் நிகழ்கின்றாள். நெருப்பில் உயிர்த்து, காற்றில் ஊக்கம் காட்டுகின்றாள். நீல நிறமாகி, வானில் நிழலிடுகின்றாள்.

இப்படியெல்லாம் அருளார் காப்புச் செய்யும் அன்னை, "சீவன் ஒடுக்கம் பூதஒடுக்கம் தேற உதிக்கும் ஞானத்தை," தென்கடற் கரையில், கன்னியாகுமரிக் கோலத்திருந்து உயிர்கட்குக் காட்டுகின்றாள்.

இன்ப அத் தலத்தில் இருந்து, இராமற்குக் கொடியரை அடக்கும் உளவு கூறி, சேது காத்த செல்வி யாயினள்.

குமரியில் ஆடிய குழந்தை முருகனை, என்றும் குமரனாய் இரு என்றாள்.

அமுதினும் இனிக்கும் அருந்தமிழ் காத்த அகத்தியர்க்கு, வாழு மாறு பல வழிமுறை வகுத்தாள்.

உருத்த கம்சனை உதைத்து, அதன் மூலம் அவனது ஆக்க சக்தியை அபகரித்தாள். தம்மைத் தந்த தந்தையின் தலையறுக்கத் துணிந்த மதுகைடபரை மட்டம் தட்டினாள். எருமை முகனை எதிர்த்து வீழ்த்தினாள். வாணாசுரர் பலர். அவர்களுள் ஒருவனது வாழ்நாள் அறுத்தாள்.

''மாசறுத்து எமை ஆநந்த வாரிதீ ராட்டிப், பண்டைத்
தேசுரு விளக்க வல்ல சிவபரம்பரை''

எனும் திருப்பெயர்க்கு ஏற்ப, குமரித் துறையில் குலவி யிருந்து, ஆன்மாக்களை மலங்கழுவி ஆள்கின்றாள்.

இங்ஙனமெல்லாம் பெருகிய கன்னியா குமரியின் பெருமையை ஊன்றி மேலோர் உணர்ந்துளர். ஓயாது அருள் நூற்களும் ஓது கின்றன. இதற்கென்றே ஒரு தலபுராணமும் இருக்கிறது. சால்பு பெருகிய அந்நூலை யருளியவர், ஸ்ரீசங்கர நாவலர்.

மூலஸ்தான மகிமையை, மூல நூற்களால்தான் அறிய முடியும். ஓதுவார் இல்லை என்ற குறையை உரைத்து. வசன நூற்கள்தான் இன்று வளரலாயின. மூல நூற்களை என்றும் சிலர்தான் ஓத இய லும். இறந்த காலத்தில் மட்டும் எல்லவரும் கற்றவரா? பாக்கள் மந்திர சொருபம்; அந்த அனுபவத்தை மறந்து விடுவது ஆகாது. கற்கோயில் காப்பிற்கு, அம் மந்திர தெய்வச் சொற்கோயில் தேவை.

எளியவரும் ஓரளவு புரிந்துகொள்ள, தலம் குறித்த வசன நூற்களைப் பல்லாயிரமாக எழுதிப் பரப்புதல், என்றைய உலகிலும் இருந்த செய்திதான்.

இவ்வரிசையில் இவ்வசன நூலை எழுதி உதவிய பெருந்தகை தேரூர். கவிமணி இல்லம்,உயர்திரு வித்துவான், சு.உமைதாணுபிள்ளை யவர்களை, எதிர்காலத் தமிழகம் ஏத்தும் போற்றும் திண்ணம் இது.

மனத்தாலும் வாக்காலும் மெய்யாலும் மெய்யர் அறநிலையப் பாது காப்பு ஆணையாளர், உயர்திரு· A. உத்தண்டராமன் பிள்ளை, I.A.S. அவர்களது ஆணையின்படி, பல கோயில்களில் நிரந்தர நெய் விளக் கேற்றி வருபவர்களும், பன்னீர், கன்னியாகுமரி அர்ச்சனை குங்குமப் பணியாளர்களும், பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சந்நிதானக் கௌபீன கைங்கர்யர்களும், பல துதிநூல் தொகுத்துப் பரப்பியவர்களுமான சென்னை கிடங்குத் தெரு ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனியார் அவர் கள், வியனார் பதிப்பாக இந்நூலை வெளியிட்டுளர்.

இந்நூலை ஓதி உணர்ந்து, உலகம் ஆக்கமான இத்தல அருமையை அறிவதாக! வரைந்தாரும், பதித்து வழங்கினாரும், ஸ்ரீ கன்னியாகுமரியின் பேரருளால், என்றும் நலம் பெற்று இன்புறுவா ராக! எங்கும் அமைதி இயைவதாக!

அம்பிகை தாணிழற்கே அடைக்கலம்! ஓம்.



கன்னியா குமரியம்மன்

குமரி மான்மியம்

தொடக்கவுரை

உலகம் பிரமனது படைப்பிற்குட்பட்டது. பிரமனது படைப்புகளை அளந்து கூற முடியாது. அவை இயங்கும் பொருள், இயங்காப் பொருள் என இரு வகைப்படும். உயிர்வகைகள் இயங்கும் பொருள். வினைக்கேற்றபடி உயிர்வகைகள் உடலெடுக்கின்றன. பிறக்கின்றன. இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன. இறக்கின்றன. பிறவி ஏழுவகைப்படும். அவற்றுள் மானிடப் பிறவி சிறந்தது. பெறுதற்கரியது. புருடார்த்தங்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. புருடார்த்தங்களை தலம், மூர்த்தி, தீர்த்தம் முதலியவைகள் வழியாகப் பெறமுடியும். மானிட யாக்கை அதற்குக் கருவியாக அமைந்துள்ளது.

சமயங்களுக்கேற்றபடி தலம், மூர்த்தி, தீர்த்தம் மாறுபடும். தீர்த்தங்கள் மக்களுக்குப் பொதுவானவை. அவற்றுள் ஒரு சிலவே சிறப்புடையன. முனிவர்களாலும், தேவர்களாலுங் கொண்டாடத் தக்கன இரண்டே உள்ளன. அவை கங்கையுங் குமரியுமாகும். பாரத நாட்டின் தென்கோடியையும் வடபாகத்தையும் அவை அலங்கரிக்கின்றன. இந்த வாய்ப்பு எந்த நாட்டிற்கும் அமைந்ததில்லை. பாரத நாட்டிற்கே உரிய தனிச் சிறப்பாகும். இந்த தீர்த்தங்களைப்பற்றி வேதங்களிலும், புராணங்களிலும், சாத்திரங்களிலும், இலக்கியங்களிலும், கல் வெட்டுக்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள் கன்னியா குமரியைப்பற்றி ஆராய்வோம்.

குமரித்தலம் இயற்கையன்னை கொலு வீற்றிருக்கு மிடம். இறைமணங் கமழுமிடம். கண்ணையுங் கருத்தையுங் கவருமிடம். மனப்பிணியையும், உடற்பிணியையும் மாற்றுமிடம்!

திருநந்தவனம், திருமாலை, திருமஞ்சனம், திருவிளக்கு முதலிய இறைதொடர்புடைய எல்லாவற்றிற்கும் 'திரு' என்று அடைமொழி சேர்க்கப்பட்டமை காண்க. ஆனால் கன்னிநாயகிக்கு திரு. கன்னிநாயகி என்னும் அடைமொழி அமையாமையை உலகம் நன்குணரும். திருச்செந்தில், திருப்பரங்குன்றம், திருக்குற்ருலம் முதலிய இறைகோயில் கொள்ளும் இடங்களுக்கெல்லாம் அடைமொழி சேர்த்தே வழங்கப்பட்டு வருகிறது. தேவி கோயில் கொண்டிருக்கும் இடத்திற்கு அடைமொழி இல்லாமல் பேசப்பட்டு வருகிறது. இந்த அமைப்பு புண்ணிய தலத்திற்குரிய தனிச்சிறப்பாகும். கன்னியாகுமரி இறை பூர்ணமான விளக்கம் நிறைந்துள்ள இடம். சாத்திர தோத்திர நூற்கள் இந்த இடத்தைப் பற்றிப் புகழ்கின்றன, இங்கே தினந்தோறும் நூற்றுக் கணக்கான பக்தர்கள் வந்து தீர்த்தங்களிலாடி தேவியைத் தரிசித்து அருள்பெற்றுச் செல்கின்றனர்,

குமரியின் தென்பாலுள்ள நிலப்பகுதியில் மக்கள் முதன்முதலில் தோன்றியதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். தேவியின் பாதச் சிலம்பொலியாகிய பரநாதமும் இங்கே எழுந்தது. மொழிகளுக்கெல்லாம் காரணமான ஒலிதோன்றியதும் இவ்விடமேயாகும். மூன்று கடல்கள் கூடும் பேரழகு எந்த நாட்டிற்கும் அமைந்ததில்லை. தலச்சிறப்பைத் தொகுத்துக் கூறுபவர்கள் சமயாச்சாரியர்கள். அவர்கள் கங்கையையும்,

குமரியையும், ஒரே நிலையில் வைத்துப் போற்றிப் புகழ்ந்துரைத்திருக்கின்றனர்.

கன்னியா குமரிக்கமைந்த பெயர்கள் பல. அவை * புறத்தாய நாடு, முறத்தாய நாடு, வாரணவாசி நாடு, கழிக்குடி, கங்கை கொண்ட சோழபுரம் என்பனவாகும். † ஆதிசேது என்ற பெயருமுண்டு. இப்பெயர்கள் அரசியல் மாற்றத்தால் ஏற்பட்டவைகளாகும். இந்த இடம் சோழர், பாண்டியர், நாயக்கர், சேரர், கர்நாடக நவாப் முதலியோருடைய ஆட்சிக்குட்பட்டிருந்தது. பூவளமும் எழிலும் மூவேந்தர்களது கண்ணையுங் கருத்தையுங் கவர்ந்தன. இந்த இடம் பாண்டி நாட்டைச் சார்ந்தது. 1766–ல் திருவிதாங்கூர் மன்னருக்கும் கர்நாடக நவாபுக்கும் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதனுல் களக்காடு பாண்டிய நாட்டுடன் இணைந்தது. கன்னியாகுமரியும் செங்கோட்டையும் திருவிதாங்கூருடன் சேர்ந்தன.

பகவதி நாச்சியார் ஆலயத்தில் நூற்றுக்கு மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. ஒன்றிரண்டைத் தவிர எல்லாம் தமிழில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முதல் இராஜராஜனது கல்வெட்டு மிகவும் பழமையானது. இராஜேந்திரன், இராஜாதிராஜன், வீர ராஜேந்திரன் முதலிய சோழமன்னர்களது கல்வெட்டுக்களும் உள்ளன. பராந்தக பாண்டியன், குலசேகர பாண்டியன் முதலிய பாண்டிய மன்னர்களது சிலா லிகிதங்கள் பல உள்ளன. நாயக்கர்கள் சேர வேந்தர்களது சாசனங்களும் உள்ளன. பராந்

* Tas vol. V1 P. 126, 1V. P, 651, 1. P. 4, 65, 168, 249.

† கன்னியாகுமரி தல புராணம் சேது மூலத்தல வரலாறு 10–வது பாடல்.

தக பாண்டியன் 12-ஆம் நூற்ருண்டி லாண்டவன். ஆலயத்தில் அவனைப்பற்றி இரண்டு சாசனங்கள் உள்ளன. ஆலயத்திலுள்ள கர்ப்பக்கிருகத்தில் ஒன்று பொறிக்கப்பட் டிருக்கிறது. இரண்டாவது சாசனம் தெற்குப் பிரகாரத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இவைகளைத் தவிர பராந்தகனைக் குறிக்கும் வேறு சாசனங்கள் இது வரையிலும் வெளியிடப்படவில்லை *'தென்னவர் தங் குல தெய்வம்' என்று சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருக் கிறது. பகவதி நாச்சியாரைப் பராந்தகன் குலதெய்வ மாக வழிபட்டு வந்தான் என்ற உண்மை சாசனத்தி லிருந்து தெரியவருகிறது. 'கன்னித்துறை சேர்ப்ப', 'குமரித்துறைவன்', 'குமரிச்சேர்ப்பன்', 'பொன்ஞர் கழல் நெடுமாறன் குமரியம் பூம்பொழில்வாய்' என முத்தொள்ளாயிரம், விக்கிரம சோழனுலா, சூடாமணி நிகண்டு, பாண்டிக்கோவை முதலிய நூற்களில் பயிலப் படும் தொடர்கள், பாண்டிய மன்னர்களையும் சோழ வேந்தர்களையுங் குறிப்பனவாகும்.

கன்னியா குமரியின் தொன்மையையும், புனிதத் தன்மையையும் அளந்து கூறுதல் எளிதல்ல. புராண இதிகாச காலத்திற்கும் மிகவும் முற்பட்டதாகும். அதை ஆராய்வோம். கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்ருண்டு களுக்கு முன்னே குமரித்தலம் அயல்நாட்டினருக் கறி முகமாக இருந்தது. ஏராத்தோதஸ் (Herodotus) கி. மு. 3-ம் நூற்ருண்டில் வாழ்ந்த மேனுட்டாசிரியர். அவ ருடைய வரலாற்று நூலில் குமரித்தலம் குறிப்பிடப்பட் டிருக்கிறது. பெரிப்புளுஸ் நூலில் 'குமரித்தலம்' குறிப்பிடப் பெற்றுள்ளது. அங்கே முனையும் துறையு முள்ளன. வாணின் பிற்பகுதியை இறையவர் பணி

*Tas. vol. 1, No. III P. I. V.

யில் செலுத்த விரும்புவோர்கள் அங்கே தீர்த்தங்களாடி, துறவறத்தை மேற்கொள்ளுவார்கள். ஒரு பெண் தெய்வம் அங்கே வாழ்ந்து, துறையில் நீராடியது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்நூல் கி.பி. 60ல் எழுதப்பட்டது. டாலமி கி. பி. 150 ல் வாழ்ந்த ஒரு பிரபல யவன யாத்திரிகர். அவர் பல நாடுகளையுங் கண்டறிந்தவர். 'கோமாரிய அக்ரான்' (Komaria Akron) என குமரி முனையை ஏட்டில் குறிப்பிடுகின்றார். மார்க்கோ போலோ உலகஞ் சுற்றிய ஆசிரியர்களுள் ஒருவர். வெனீஸ் நாட்டைச் சார்ந்தவர். ஜாவாத் தீவிலிருந்து பார்க்கமுடியாத ஒரு துருவத்தைக் குமரிமுனையிலிருந்து, நேராக முப்பது மைல் தூரத்தில் கண்டதாக ஏட்டில் குறிப்பிடுகின்றார். அன்றியும் குமரித் தலமானது அடர்ந்த காடுகளையுடையது. அங்கே கொடிய விலங்குகள் உள்ளன என்றும் கூறியுள்ளார். ஐபன் படுடா (Ibn Batuta) ஒரு முகம்மதிய சரித்திராசிரியர். கி. பி. 1203-ல் வாழ்ந்தவர். குமரிமுனையை 'ராஸ் கும்ஹாரி' என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். 'மலபார்' என்ற பாண்டிய நாட்டிற்கும் மலபாருக்குமிடையே குமரித் தலமிருக்கிற தென்றும் கூறியுள்ளார்.

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்'

(புறம்-6)

'வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து'

(தொல்காப்பியம்-பாயிரம்)

'தென்குமரி வடபெருங்கல்
குண குடகட லாவெல்லை'

(மதுரைக்காஞ்சி 70-71 வரிகள்)

2777

" நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு "
(சிலப்பதிகாரம்-வேனிற்காதை 1-2 வரிகள்)

" பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள "
(சிலப்பதிகார உரை)

நீலத் திரைக்கடல் ஓரத்திலே-நின்று
நித்தந் தவஞ்செய் குமரி எல்லை
(பாரதியார்)

இவ்வடிகள் அகன்று விரிந்த தமிழ் நாட்டின் எல்லையைக் குறிப்பன. குமரித் தலத்தின் எஞ்சிய நிலப் பகுதியைக் கடல் விழுங்கியது. மூவேந்தர்களும் இமயத்தில் விருதுகளைப் பொறித்தனர். சங்க நூற்கள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன. தமிழ் வேந்தர்களது ஆட்சி வடநாடு வரையிலும் பரவி யிருந்தது.

" வடஇமயம் தென்குமரி
வரம்புடைய நாடு
வற்றாத முக்கடலும்
வளைந்தணிசெய் நாடு "

" இமையப் பொருப்பகத் தீராண் டுறைந்தபின்
குமரித் தீர்த்த மரீஇய வேட்கையின்
(பெருங்காதை-உஞ்சை-சாங்கி 235-236)

" அராஅந் தானமு மணிமறை தெண்டிரைக்
குமரித் துறையு மமர்வனர் நோக்கி "
(பெருங்-நரவா-வாயா-151-152)

" குண்டுநீர்க் குமரித் தெண்டிரை யாடிய
போயின னென்னும் பொய்ம்மொழி பொத்தி "
(பெருங்-கிலா-சம்பை 82-83)

"மாமறை முதல்வன் மாடலன் என்போன்
மாதவ முனிவன் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து"

(சிலப்-அடைக்-13-15)

"பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
கொண்டோற் பிழைத்த தண்ட மஞ்சித்
தென்றிசைக் குமரி யாடிய வருவோன்"

(மணி–ஆபுத்–5–7)

"நடவை வருத்தமொடு நல்கூர் மேனியன்
வடமொழி யாட்டி மறைமுறை யெய்திக்
குமரி பாதங் கொள்கையின் வணங்கி"

(மணி-ஆபுத்–72–74)

"கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்"

(அப்பர் 213 பதிகம் பாடல் 2)

"ஆங்குள இராம சேதுக் காதியாம் சேதுமூலம்
ஈங்கிது வென்னி லிந்தத் தலத்தினை மிக்காய்"

(கன்னி-சேது–10)

"கங்கையிடை குமரியிடை எழுநூற்றுக் காதஞ்
செய்தார் செய்தபாவங் கொள்வார்"

(TAS Vol-I)

மேலே குறிப்பிட்ட தொடர்கள் குமரித் தீர்த்தச் சிறப்பை உணர்த்துவன. அபஞ்சிகன் வடநாட்டு வாரணாசியின் வேத விற்பனன். அவன் மனைவி சாலி ஒழுக்கந் தவறினாள். அதை உணர்ந்து மிக வருந்தி பாவம் நீங்க, பாத நடையாகக் குமரித் துறைக்குச் சென்றாள். அங்கே தீர்த்தங்களிலாடி பாவம் நீங்கப் பெற்றாள். மாடலன் நான்மறை பயின்றவன். அந்தணசீலன்.

அவன் மலேய மலேயை வலம் வந்து குமரித் துறையில் தீர்த்தமாடிச் சென்றனன்.

'குமரியாடி வருகிறேன். வயிறு பசிக்கிறது. சோறு தாருங்கள்' என்று கேட்டவர்களுக்கு வயிரூர உண வளித்து உபசரிப்பது வழக்கம். இவ்வுண்மை தொல் காப்பியம் சொல்லதிகாரம் கிளவியாக்கம் பதினேந் தாவது சூத்திரவுரையில், 'குமரியாடிப் போந்தேன் சோறு தம்மின்' என்று கூறப்பட்டிருக்கிறது.

வால்மீகி, காளிதாசன், வேத வியாசர் முதலியோர் தத்தம் நூற்களில் குமரித் தலத்தைக் குறிப்பிடுகின்ற னர். பாரதத்தில் வனபருவத்தில் குமரித்தலத்திலுள்ள தீர்த்தங்களேயும், தீர்த்தமாடும் முறைகளேயும் சுட்டிக் கூறப்பட்டிருக்கிறது. சேதுபுராணத்திலும் குமரித் தலத் தைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. அங்கே தீர்த்தமாடு வோர்,

"ஆதிஸேதோ: கன்னியாகுமரி க்ஷேமத்ரே
மாதுர் பிதிர்தீர்த்தே"

என்று கூறி சங்கல்பம் செய்துகொள்வார்கள். குமரி ஆதி சேதுவாகவும், தனுஷ்கோடி மத்திய சேதுவாக வும், கோடிக்கரை அந்திய சேதுவாகவும் கணக்கிடப் பட்டிருக்கின்றன.

கார்த்த வீரியன் சூரிய குலத்தில் பிறந்தவன். பண்பட்டவன். ஆறு சக்கரவர்த்திகளில் ஒருவன். தத்தாத்திரேய முனிவரைப் பூசித்து வந்தான். முனிவர் அவன் பக்தியை மெச்சி பாற்ம புராணத்தை உபதேசித் தருளினர். அந்தப் புராணத்தில் க்ஷேத்திர வைபவ காண்டத்தில் உவரி பாகத்தில் கன்னியாகுமரி மான்மி யங் கூறப்பட்டிருக்கிறது. நைமிசாரணிய முனிவர்க ளான சவுனகாதி முனிவர்களின் விண்ணப்பப்படி,



சூரியோதயம்



அம்பாள் விமானம்

சூதமுனிவர் கன்னியாகுமரி மான்மியத்தை உரைத் தருளினர்.

தீவுகளில் நாவலந் தீவு சிறந்தது. அதை ஆக்கி னேந்திரன் ஆண்டு வந்தான். அவனது ஒன்பது மக்கள் ஒன்பது பகுதிகளை ஆண்டு வந்தனர். அவர் களுள் பரதன் தென்பகுதியை ஆண்டு வந்தான். அந்நிலப் பகுதி பரத கண்டம் என வழங்கலாயிற்று. பரதனுக்கு ஒன்பது மக்கள் பிறந்தனர். அவர்களுள் குமரி தென்பகுதியை ஆண்டு வந்தாள். அவளாண்ட அப்பகுதி குமரிக்கண்டம்' என வழங்கலாயிற்று. அங்கே கன்னிநாயகி வாழ்ந்து வந்தாள். அவளை இராமன், குகன், இந்திரன், அகத்தியர் முதலியோர் பூசித்து வரங் களும் பெற்றனர்.

விஷ்ணு கொண்ட அவதாரங்கள் பல. சக்தி அவற் றுள் ஒன்று. மாயாள் என்பது அவளுடைய இயற் பெயர். அரக்கர்களை மாய்க்க தென்கோடிக் கரையில் தவக்கோலத்துட னிருந்தாள். அவள் மதுகையிடவர், மகிடாசுரன் முதலிய அரக்கர்களை மாய்த்து தேவர்களின் துன்பத்தைப் போக்கி யருளினுள். அவளருளால் கடற் கரையில் பல தீர்த்தங்கள் தோன்றின. தேவியின் மீது ஏற்றிக் கூறும் கதைகளுக்குக் கணக்கு வழக்கில்லை. அவை பக்திப் பெருக்கால் ஏற்பட்டவைகளே. அவற்றை அடியில் வருமாறு காண்க. இரு அசுரர்கள் தேவர்களைத் துன்புறுத்தினர்கள். தேவர்கள் துயர் நீங்க காசி விசுவ நாதரிடம் முறையிட்டார்கள். அவர் இரண்டு பெண் தெய்வங்களைப் படைத்தார். ஒரு தெய்வம் கல்கத்தா வில் (காளி கட்டத்தில்) கோயில் கொண்டிருப்பவள். மற்றவள் குமரித் தலத்தில் தவக்கோலமுடன் நிற்பவள்.

சுசீந்திரமுடையார்க்குத் தேவியின் மீது காதல் ஏற்பட்டது. அவர் தேவர்களிடம் உள்ளத்தைத் திறந்து காட்டினர். கண்ணுதலோன் திருமணத்திற்குப் பின் காப்பவர் யார் என்றெண்ணி தேவர்கள் கலங்கினர்கள். தேவர்கள் அதை நாரதரிடம் எடுத்துரைத்தார்கள். திருமணம் ஒரு நாள் இரவு நடக்க விருந்தது. சிவன் திருமணக் கோலமுடன் எழுந்தருளினர். வழியில் நாரதர் சேவல் வடிவுடன் நின்று கூவினர். பொழுது புலர்ந்ததை உணர்ந்த சிவன் ஆலயத்திற்கு எழுந்தருளினர். *வழுக்கம் பாறையில் வைத்து இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. பாறையில் அதற்குரிய அடையாளங்களை இன்றுங் காணலாம்.

சிவனது வரவை நோக்கி, தேவி திருமணக் கோலத்துடனிருந்தாள். அவர் வரவு பொய்த்ததை யுணர்ந்து தேவி ஆலயத்திற்கெழுந்தருளி, இலுப்பைப் பூமாலை ஏந்திய கையை யுடையவளாய் தவக் கோலத்துடன் காட்சி வழங்கி வருகிருள். திருமணத்திற்காக எடுக்கப்பட்ட பொருள்கள் எல்லாம் உருமாறி, கடற்கரையில் பலநிறமுடைய மணலாகக் காட்சி யளிப்பதாக பக்தர்கள் கூறி வருகின்ருர்கள். கன்னிநாயகி இளமை மாருமல் தவக் கோலத்துடன் அங்கே கோயில் கொண்டிருக்கிருள். கன்னி, குமரி ஆகிய இரு பெயர்களும் பெண்களின் இளமைப் பருவத்தைக் குறிக்கும். ஆனல் கன்னியாகுமரி என்ற சொற்ருெடர் தலத்தின் பெயரைக் குறிக்கிறது.

தேவி தென் சமுத்திரக் கரையில் கோயில் கொண்டிருக்கிருள். ஆலயம் கோடிக்கரையி லிருக்கிறது. மிகவும் பழமையானது. அதன் காலத்தை அளந்து கூறமுடி

*வழுக்கம் பாறை:—சுசீந்திரத்திலிருந்து கன்னியா குமரிக்குச் செல்லும் வழியில் ஒருமைல் தூரத்திலிருக்கிறது.

யாது. ஆலயத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் மதில்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. மதிலுக்கு வெளியே வெளி வீதி யிருக்கிறது. இந்த வீதியில் வடக்கும் கிழக்கும் வாசல்கள் உள்ளன. கிழக்கு வாசல் உற்சவத்தின்போது ஆராட்டு நாட்களில் மட்டும் திறந்து அடைக்கப்படுவது வழக்கம். வடக்கு வாசல், எப்பொழுதும் திறந்து உபயோகிக்கப்பட்டு வருகிறது.

ஆலயத்தின் கீழ்பாலும் தென்பாலும் பல தீர்த்தங்கள் உள்ளன. வடக்கு வாசலின் முன் பக்கம் அடித்தளக் கட்டுடன் முற்றுப்பெருமல் நான்கு தூண்களுடன் நிற்கும் கோபுரத்தின் அடித்தளத்தைக் காணலாம். வாசலைக் கடந்து உள்ளே செல்ல வேண்டுமானுல், வணக்க ஒடுக்கமாகவும் ஆசாரப்படியும் செல்ல வேண்டும். உடுப்பு, தொப்பி, செருப்பு முதலியவைகளைக் கழற்றிவிட வேண்டும். வாசலையடுத்து மூன்ருவது பிரகாரம் இருக்கிறது. அதன் முன் ஆனந்த மண்டபத்தைக் காணலாம். மண்டபத்தில் இரண்டு யாளிகள் தூண்களில் செதுக்கப்பட் டிருக்கின்றன. இந்த மண்டபத்தின் மேற்குப் பக்கம் ஊஞ்சல் மண்டபமிருக்கிறது. இதைக் கொலு மண்டபம் என்றும் கூறுவதுண்டு. இங்கே அற்புதமான புராணச் சித்திரங்களைக் காணலாம்.

ஆனந்த மண்டபத்தைத் தாண்டி உள்ளே சென்ருல் இடைவழியின் இருமருங்கும் அழகிய சித்திரங்களைப் பார்க்கலாம். கால பைரவரையும் தரிசிக்கலாம். இடைவழியைத் தாண்டினுல் இரண்டாவது பிரகாரத்தைக் காணலாம். நேராகக் காட்சியளிப்பது ஒரு சிறிய வாசல். அது கர்ப்பக் கிருகத்திற்குச் செல்லுவதற்குரியது. அதன் வழியே உள்ளே செல்லக் கூடாது. வலது பக்கமாகத் திரும்பினுல் திருக்கிணற்றையும் அதன் எதிர்ப் பக்கமாக ஒரு வாசலையும் காணலாம். அந்த வாசல்

வழியே உள்ளே செல்லக் கூடாது. இடது பக்கமாகத் திரும்பினுல் கொடிமரம், பலிபீடம் முதலியவைகளேக் காணலாம். கொடிமரத்தினடியில் சென்ருல் கிழக்கு முகமாகத் தவக்கோலமுடனிருக்கும் தேவியைத் தரிசிக்கலாம். கொடிமரத்தினடியில் விஜயநகர மன்னனது சாசனம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அது கிரந்த லிபியில் வடமொழியில் எழுதப்பட்டிருக்கிறது.

கொடிமரத்திற்கு எதிராக சபா மண்டபம் இருக்கிறது. இதைத் *தட்டு மண்டபம் என்றும் கூறுவதுண்டு. தட்டி மண்டபம் என்று மருவி இன்று வழங்கப்பட்டு வருகிறது. இங்கே இசை நிகழ்ச்சிகள் தினமும் நடைபெறும். மண்டபத்தின் மேல் வரிசையில் அற்புதமான புராண சிற்பங்களேக் காணலாம். சுவர்களில் சிலாசாசனங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்த மண்டபத்திற்கு மேற்குப் பக்கம் மணிமண்டபம் இருக்கிறது. இது தேவியின் சந்நதியின் முன்னுள்ளது. இங்கே நின்று தேவியைக் கண் குளிர மனங்குளிரத் தரிசிக்கலாம். மண்டபத்தை நான்கு உருண்டையான தூண்கள் தாங்கி நிற்கின்றன. வீரராஜேந்திரனுடைய பெரிய சாசனம் தூண்களில் பொறிக்கப்பட்டிருக்கிறது. சாசனத்தைப் பாதுகாக்க தூண்களில் பித்தளேத் தகடு பொதியப்பட்டிருக்கிறது. தேவி எழுந்தருளியிருக்கும் மண்டபமே முதலில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். அது மிகவும் பழமையாகக் காட்சியளிக்கிறது. நாளடைவில் கர்ப்பக்கிருகம், மற்ற மண்டபங்கள் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். கோயில் திருப்பணிகள் சேர சோழ பாண்டிய விஜயநகர மன்னர்களால் செய்யப்பட்டவையாகும்.

---

* தட்டு: ஒருவித விளக்கு. விசேஷ நாட்களில் இம் மண்டபத்தில் கேளிக்கைகளிடம்பெறும். அவ்வேளே இறையவர் பணிக்குரிய மகளிர் தட்டு விளக்கேந்தி நிற்பார்கள். அந்நிகழ்ச்சிகள் வழக்கற்று விட்டன.

மணிமண்டபத்தைக் கடந்து உள்ளே சென்ருல் கர்ப்பக்கிருகத்தின் தென்பால் இந்திரகாந்த விநாயகரை யும், சூரிய பகவானையும் தரிசிக்கலாம். கர்ப்பக்கிருகச் சுவர்களில் தமிழ்ச் சாசனங்கள் பல உள்ளன. கர்ப்பக் கிருகத்தைச் சுற்றி மணிமண்டபத்திற்கு வரவேண்டும். மண்டபத்தின் வடபால் தியாக சௌந்தரி யம்மனைத் தரி சிக்கலாம். பின்னர் சபா மண்டபம் என்ற தட்டு மண்டபத்தின் வழியாக கொடிமரமுள்ள பிரகாரத்தைச் சுற்றி வரும் வேளை தெற்குப் பிரகாரத்தில் தேவிக்குரிய நெய்யப்பம், வடை, அரவணை, பொங்கல், பாயாசம் முதலிய அமுது படைக்கும் மடைப்பள்ளி யிருக்கிறது. மேற்குப் பிரகாரத்தைத் தாண்டி வடக்குப் பிரகாரத்திற் குத் திரும்பும் வடமேற்கு மூலையில் கோட்டையம்மனைத் தரிசிக்கலாம். பால சௌந்தரியம்மன் என்று இந்தத் தேவியைக் கூறுவதுண்டு. சுவர்களில் பக்திப் பாடல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அன்றியும் கன்னியாகுமரி சாலைப் பெருவழியில் இரண்டு பர்லாங் தூரத்தில் வடக்கே ஒரு ஆலயமிருக்கிறது. ஆலயம் பெருவழியின் மேற்குப்பக்க முள்ளது. அதற்குக் குகனுண்டேசுரம் என்று பெயர்.

'கோட்டையம்மன்', 'குகனுண்டேசுரம்' இரண்டும் குறிப்பிடத்தக்கன; ஆராய்ச்சிக்குரியவை. கோட்டை யம்மன் சிலையைப் பற்றிப் பல கதைகள் கூறப்பட்டு வருகின்றன. முகிலன் படையெடுத்தான். அதிகார வெறியால், ஆசை வெறியால் அம்மனை எடுத்துச் சென்று, கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள வட்டக் கோட்டையில் பல நாட்கள் வைத்திருந்தான். அவன் மனம் மாறுதலடையவே, அம்மனைக் கொடுத்தனுப்பி னன். தேவியைக் கோட்டைக்குள் வைத்து முகிலன் பாதுகாத்ததால் 'கோட்டையம்மன்' என வழங்கலா

யிற்று என்று சிலர் கூறுகின்றனர். மங்கம்மாள்; தேவியை மதுரையிலிருந்து கொண்டுவந்து ஆலயத்தில் எழுந்தருளச் செய்தாள். அறுபது கோட்டை நன்செய் நிலத்தையும் தேவிக்கு வழங்கினாள். கோட்டையளவாக அம்மனுக்கு மங்கம்மாள் நிலத்தை வழங்கியதால், 'கோட்டையம்மன்' எனப் பெயர் வந்ததென்றும் கூறுகின்றனர்.

ஹீராஸ் ஒரு சிறந்த சரித்திராசிரியர். விஜயநகர நூலை எழுதி உதவியவர். கோட்டையம் நாகமநாயுடுவின் மகன் விசுவநாத நாயுடு. அவன் இந்து மதப் பற்றுதலுடையவன். விஜயநகரத்திலிருந்து மதுரைக்கு ஒரு விக்கிரகத்தைக் கொண்டு வந்தான். மதுரை ஆலயத்தில் அம்மனை எழுந்தருளச் செய்யக் கோயிலைச் சீர் திருத்தினான் என்று அவர் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

மங்கம்மாள் அவர் பரம்பரையில் வந்தவள். அந்த அம்மனை அவ்வரசி குமரித் தலத்தில் எழுந்தருளச் செய்தாள். கோட்டியம் நாயுடு பரம்பரையில் வந்த அம்மன் 'கோட்டையம்மன்' என வழங்கலாயிற்று என ஊகிக்க இடமுண்டு. ஆனால் விசுவநாத நாயுடு விக்கிரகத்தை விஜயநகரத்திலிருந்து மதுரைக்குக் கொண்டு வந்ததற்கு தக்க ஆதாரங்கள் எதுவுமில்லை. கோட்டையம்மன் என்ற பெயர் மாறி 'பாலசௌந்தரியம்மன்' என்று வழங்கப்பட்டு வருகிறது. இது ஆராய்வதற்குரிய விஷயமாகும்.

குகனாண்டேசுரத்தைப்பற்றி கன்னியாகுமரி ஸ்தல புராணத்தில் 'குகனாண்டேசுரம்' என்று கூறப் பட்டிருக்கிறது. அதன் விளக்கத்தை ஆண்டு கண்டு கொள்க. அந்த ஆலயம் மிகவும் சிறியது. இரு மண்

டபங்களையுடையது. வேலைப்பாடுடையது. சுவர்களில் சாசனங்கள் பல உள்ளன. ஆலயம் முதல் இராஜராஜ ளுல் கட்டப்பட்டது. கர்ப்பக்கிருகம் மிகவும் சிறியது. இங்கே உள்ள மூர்த்தியின் பெயர் 'குகனுண்டேசுரர்' என்று வழங்கப்பட்டு வருகிறது. திரு. கோபிநாதராய ரவர்கள் ஆலயம் குகை போன்றிருப்பதால் 'குகை நாதேசுரர்' எனப் பெயரை விளக்கப்படுத்தி எழுதியிருக் கிருர். குமரித்தல மான்மியத்தில் 'குகனுண்டேசுரம்' என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே பொறிக்கப் பட்டிருக்கும் இராஜராஜனது சிலாசாசனத்தில், 'இராஜ ராஜேஸ்வரம்' என்றும், எழுந்தருளியிருக்கும் மூர்த்தியை 'திருப் பெந்தீசுவரர்' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

முதல் இராஜராஜன் தஞ்சைக் கோயிலை எழுப்பிய வன். அந்த ஆலயத்திலுள்ள இராஜராஜனது கல் வெட்டில் அந்த ஆலயத்தை 'இராஜ ராஜேஸ்வரம்' என்றும், மூர்த்தியை 'திருப்பகதீசுவரர்' என்றும் கூறப் பட்டிருக்கிறது. இரு ஆலயங்களையும் எழுப்பியவன் இராஜராஜனே ஆகும். ஆனுல் ஆலயங்களிலுள்ள மூர்த்திகளின் பெயர்களில் வேற்றுமை காணப்படுகிறது. பெயர்களைச் சிதைவாகக் கொண்டு பொருத்தமுறப் பொருள் கொள்வதற்கும் ஒரு அளவுண்டு. கடவுள் பக்தியும், புயவலியும், படைவலியுமுடைய முதல் இராஜ ராஜனுல் எழுப்பப்பட்ட ஆலயத்தின் பெயர் குகனுண் டேசுரம் என உருமாறி எவ்விதம் வழங்கலாயிற்று? இது ஆராய்ச்சிக்குரிய விஷயமாகும். இந்த மாற்றங்கள் எல்லாம் முதிர்ந்த பக்தியால் ஏற்பட்டவைகளேயாகும்.

இந்தப் புண்ணிய தலத்தின் தீர்த்தங்களிலாடி தேவி யைப் பூசித்து காரிய சித்தி பெறலாம். வேண்டிய வரங்


களையும் பெறலாம். இரு சுடர்களின் எழுச்சி, மறைவைக் காணக் காண கணக்கிலா இன்பம். இந்த ஆலயத்தைப் பற்றிய மான்மியம் எழுத ஆர்வமும், ஆற்றலும் தந்து அருளிய பகவதி நாச்சியார் பாதமலரே தஞ்சம்.

கவிமணி இல்லம்
தேரூர்
1—4—1960

உங்கள் அன்பன்,
சு. உமைதாணு பிள்ளை



சூரிய அஸ்தமனம்



விமானங்கள் தோற்றம்

குமரி மான்மியம்

நைமிசாரணியம்

முனிவர்கள் தவ ஒழுக்கமுடையவர்கள். பற்றற்றவர்கள்; அவர்கள் பிரமதேவனிடஞ் சென்று தவஞ் செய்வதற்குரிய இடத்தை வேண்டினர்கள். பிரமன் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, தருப்பைப் புல்லை ஒரு சக்கரமாகச் சமைத்து மந்திரித்து விட்டார். அதன் தெய்வீகச் சக்தியைக் கண்டு முனிவர்கள் வியந்தார்கள். அந்தச் சக்கரம் நிலைகொள்ளுமிடத்தைத் தவஞ்செய்வதற்குரிய இடமாகக் கொள்ளும்படி பிரமன் முனிவர்களிடம் திருவாய் மலர்ந்தருளினர்.

அந்த நேமி ஒரு ஆரணியத்தில் நிலை கொண்டது. நேமி நிலைகொண்ட ஆரணியம் 'நைமிசாரணியம்' என வழங்கலாயிற்று. அவ்விடம் முனிபுங்கவர்கள் கூடுமிடம். அமைதி யளிக்குமிடம். ஆசைகளை அகற்றுமிடம். ஆன்மாக்களை அலைக்கும் மும்மலங்களைப் போக்குமிடம். தவப்பயிர் தழைக்குமிடம். ஐம் புலன்களை அடக்குமிடம். ஆறு குற்றங்களை நீக்குமிடம். வேதங்களின் இருப்பிடம். அங்கே,

"சருகிலை யருந்தி நின்று தவஞ்செய்வா ரநேக கோடி
யருகுநீ ரருந்தி யாற்று மருந்தவ ரநேக கோடி
வருபட வரவு போல வாயுபக் கணரே யாகிப்
பெருகுவெம் பசியைச் செற்ற பெருந்தவ ரநேக கோடி

ஒற்றையங் காலி லுள்ள வொருபெரு விரலை யூன்றி
மற்றையோர் கான்மு ழந்தாண் மடக்கிநீள் குறங்கில் வைத்துப்
பற்றிரு கரமுங் கூப்பிப் பரந்துவீழ் சடையி னேடுஞ்
சற்றுமு ணின்றி நின்று தவஞ்செய்வ ரநேக கோடி.

(கன்னி – நைமிசாரணிய சருக்கம் 14, 15)

இவ்விதம் முனிவர்கள் கடுந்தவஞ் செய்யும் தபோ வனமாக நைமிசாரணியம் விளங்கியது. அங்கே வாழும் முனிவர்கள் நித்திய கடன்களை முடித்து, சிவ வேடப் பொலிவுடன் விளங்குவார்கள்.

சூதரின் உபதேசம்

சூதமுனிவர் நைமிசாரணியத்திற்கு எழுந்தருளினார். அவர் வேத வியாசரது அருளைப் பெற்றவர். முனிவர்கள் அவரை வணங்கி வரவேற்று உபசரித்தனர். சவுனகாதி முனிவர்கள் அவரை ஆசனத்தில் எழுந்தருளச் செய்து பூசித்து, 'பதினெண் புராணங்களையும் திருவாய் மலர்ந்தருளினீர்கள். காந்தம் சிவ புராணத்துள் ஒன்று. அதிலுள்ள சுசிந்தை மான்மியங்கூறி யருளினீர்கள். சுசிந்தை என்னும் ஞான வனத்திலுள்ள தீர்த்தத்தையும் பயனையுங் கூறக் கேட்டோம்.

குமரித்தலத்தின் மான்மியங் கேட்க விரும்புகின்ரேம். கன்னிநாயகி அங்கே கோவில் கொண்டிருக்கின்ருள். பராசக்தியின் வரலாற்றை அறிய ஆசைப்படுகின்ரேம். திருவாய் மலர்ந்தருள வேண்டும் என்று சூதமுனிவரிடத்தில் முனிவர்கள் வேண்டினர்கள்.

சூதமுனிவர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, முனிவர்களே! இந்த வரலாற்றை தத்தாத்திரேய முனிவர், கார்த்த வீரியன் என்னும் பண்பட்ட அரசனுக்

குக் கூறியருளினர். உலகத்தில் தல மகாத்மியமுள்ள இடங்கள் பல.

“ பொருவில்சீர் மேவு மைந்துநற் றலங்கள்
புகன்றிடிற் புண்ணியத் தலமாக்
கருதுமக் காசி கன்னிகா குமரி காஞ்சியவ்
விராமனற் சேது
வருமையா வுள்ள செனர்த்தன மிந்த வைந்துநற்
றலங்களைப் புவியிற்
பெரிதுள மகிமைத் தலங்களென் றுயர்நூல்
பெருக்கவே பேசிடு மம்மா ”
(கன்னி-குமரித்தல வினவிடைச் சருக்கம் 19-ம் பாடல்.)

இவற்றுள் குமரித்தலம் குறிப்பிடத் தக்கது. கன்னியாகுமரி தல மான்மியஞ் சிறந்தது; வேதாகமங்கள் நிறைந்தது. கன்னிநாயகி தவக்கோலமுடனிருப்பது. இந்த வரலாறு பிரமனுக்குரிய ப்ரஹ்ம புராணத்தில் க்ஷேத்திர வைபவ காண்டத்தில் உவரி பாகத்திலுள்ளது. இதைக் கேட்பவர், சொல்பவர் எல்லா செல்வங்களையும் பெறுவர். கன்னியாகுமரி, தலம், தீர்த்தம், மூர்த்தி மகாத்மியங்களிற் சிறந்தது என்று சூதமுனிவர் அடியில் வருமாறு அவர்களுக்குக் கூறுவாராயினர்.

தலப் பெருமை

நாவலந் தீவை ஆக்கினேந்திரன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுடைய ஒன்பது மக்கள், அத்தீவிலுள்ள ஒன்பது பகுதிகளை ஆண்டு வந்தார்கள். அவர்கள் பெயர்களே அந்தந்த நிலப்பகுதிகளுக்கமைவதாயிற்று. தென்பாலுள்ளது பரத கண்டம். பரதன் அதை ஆண்டு வந்தான். அவனுக்கு இந்திரன், கசேரு, தாம்பிர வருணன், கபத்தி, மாநாகன், சந்திரன்,

கந்திருவன், வருணன் என எட்டுப் புதல்வர்களும், குமரி என்னும் ஒரு புதல்வியும் பிறந்தார்கள்.

"ஒன்பது பேர்க்கும் பாரத வருட மொன்றையும்
பரதனென் பவன்ரு
னின்புறும் படியே யொன்பது கண்ட மிட்டதைக்
கொடுத்தன னியல்பாற்
றென்புலக் கண்டங் குமரிபெற் றனளத் திசையிலத்
தலத்தர செய்தி
யன்பொடு குமரி யிருந்தன ளதனு லதன்பெயர்
குமரி யானதுவே.

(கன்னி-குமரியென்னும் பெயர் வரலாற்றுச் சருக்கம் 40)

பரத கண்டத்தைப் பரதனுடைய ஒன்பது மக்களும் ஆண்டு வந்தார்கள். குமரி தென்பாகத்தை ஆண்டு வந்தாள். ஆதலால் அந்நிலப்பகுதி குமரி கண்டம் என வழங்கலாயிற்று. அவ்விடத்தில் விஷ்ணுவின் தங்கை கன்னிநாயகி தவஞ் செய்யலானாள்.

குமரிநாடு நாட்டு வளமும், நகர வளமும் ஒருங்கே அமைந்தது. பாண்டிய மன்னரது ஆட்சிக்குட்பட்டது. அவர்கள் பகவதி நாச்சியாரைக் குலதெய்வமாக வழி பட்டு வந்தார்கள். நகர்வீதி யெங்கும் தென்றல் தவழும். மறைகள் முழங்கும். அறச்சாலைகளும் மாடங்களும் நிறைந்தது. மக்கள் கொடைமடம் உடையவர்கள். புகழ் வளர்க்கும் புலவர்களையும் கவிஞர்களையுங் கொண்டது. அலை கொழிக்கும் கடல் வளமும், மலை கொழிக்கும் பல வளமும் நிறைந்தது. முகில் கொழிக்கும் நன்செய் வளமும் புன்செய் வளமும் உடையது.

ஆதி சேது

இராமன் சீதையை மீட்கக் கடலில் அணை கட்டத் துணிந்தான். கன்னிநாயகி கோயில் கொண்டிருக்கும்

தென்கடற்கரைக்குச் சென்று தீர்த்தங்களிலாடி தேவி யைப் பூசித்தான். சேதுவைக் கட்டவும், இராவணனை அழிக்கவும், தேவி இராமனுக்கு வலியருளினுள். தேவிகா பட்டணத்திலும், சேது மூலமாகிய குமரித்தலத் திலுமிருந்து சேதுவைக் காக்க தேவி இராமனுக்கு அருள்பாலித்தாள். பரசுராமர் பூசித்த விநாயகரை இராமன் பூசித்து சேதுவைக் கட்டவும், அரக்கர்களை அழிக்கவும் வரங்களைப் பெற்றுன். அன்றுமுதல் குமரிப்பதிக்கு 'ஆதி சேது' அல்லது 'மூல சேது' என்றும் பெயர் அமைவதாயிற்று. இங்கே தீர்த்தங்களி லாடி தேவியைப் பூசித்தவர்களது பிரமகத்தி பாவம் அகலும். மலடிகளுக்கும் புத்திரப்பேறு கிட்டும்.

குகனுக்கருளிய குமரி

குமரக் கடவுள் சிவனைத் தரிசிக்கத் திருவுள்ளங் கொண்டு, குமரித்தலத்திற் கெழுந்தருளி சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்து வந்தார். சிவன் குமரனது பூசையை ஏற்று, 'எம்மைப் பூசித்தவர், தரிசித்தவர் பாவங்கள் எல்லாம் நீங்கப்பெற்று காரிய சித்தியும் பெறச் செய்வோம். எப்பொழுதும் இவ்விடத்தில் எழுந்தருளி யிருப்போம்' என்றருள் செய்தார். குகன் தேவியைப் பூசித்தான். தேவி குகனது பூசையை ஏற்று, 'வேதாகம புராணங்களால் மதிக்கப்படாத மான்மியந் தந்தோம் என்றருள் பாலித்தாள். குகன் சிவனைப் பூசித்த இடம் குகனுண்டேசுரம் என வழங்க லாயிற்று.

தானவர்கோனுக் கிரங்கிய தாய்

அமுதம் அற்புதமானது. அடைவதற்கரியது. அதை யுண்டவர்களுக்கு அழிவில்லை. தேவர்கள் திருப்

பாற்கடலைக் கடைந்தார்கள்; அமுதுடன் அகலிகை என்ற ஒரு பேரழகியும் தோன்றினாள். இந்திரனும், கௌதமரும் அவள் அழகில் சொக்கினார்கள். பிரமன் அவர்களுடைய குறிப்பை யுணர்ந்து, ‘ நீங்கள் இரண்டு பேரும் தவஞ்செய்ய வேண்டும். பிந்தி எழுந்தவருக்கே அவள் உரியள் ’ என்று கூறியருளினான்.

அகலிகையை அடைய அவர்கள் கடலினடியில் கடுந்தவத்தை மேற்கொண்டார்கள். இந்திரனுடைய உள்ளம் நிலைகொள்ளவில்லை. முந்தி யெழுந்தான். ஆதலால் அவளை இழந்தான். கௌதமர் தவத்தில் மூழ்கினார். அவரது தோள்களில் இரண்டு மூங்கில்கள் முளைத்தெழுந்தன. தேவதச்சன் அவைகளை வெட்டி வீழ்த்தி, இரண்டு விற்களைச் சமைத்து சிவனுக்கும், விஷ்ணுவுக்குங் கொடுத்தான்.

மரங்களை வெட்டிய அதிர்ச்சியால் கௌதமர் உணர்ச்சிபெற் றெழுந்து, அகலிகையை மணந்தார். இந்திரன் கௌதமர் மீது பொறாமை கொண்டு, தகாத ஒழுக்கத்தி லொழுகி, கௌதமருடைய சாபத்திற் காளானான். நாணி கரந்துறைந்தான். வானவர் கோனைத் தேடி இந்திராணி வாட்டமுற்றாள். அவள் வியாழ பகவானிடஞ் சென்று முறையிட்டாள். வியாழ பகவான் இந்திரனை வரவழைத்து, ‘ பிறர் மனைவியை விரும்புகிறவனை உலகம் இகழும். அவன் இருமைப் பயன்களை இழப்பான். நரகத்தில் விழுந்து துயருறு வான். காமம், பொருள் கல்வி தவம் மானம் அறிவு நட்பு வலிமை முதலியவைகளைக் கெடுக்கும். அவற்றை அறிந்திருந்தும் சாபத்திற்காளானாய். உனது சாபத்தை மாற்றுதலரிது. உடம்பிலுள்ள யோனிகள் எல்லாம் பிறருடைய பார்வைக்குக் கண்களாகத் தோன்றும்படி வரந்தந்தோம் ’ என்றருள் செய்தார்.

இந்திரன் வியாழ பகவானை வணங்கி சாப விமோசனமும் வேண்டினான். சிவசயிலம் என்னும் ஞானவனத்தில் தாணுமாலயன் கோயில் கொண்டிருக்கிறான். அவனைப் பூசித்துத் தவம் செய்தால் உன் பாவம் அகலும் என்றருளினார். வானவர்கோன் ஞானவனத்திற்குச் சென்று, சிவனைப் பூசித்து வரம் வேண்டினான். 'தென் சமுத்திரக் கரையிலுள்ள குமரித் தலத்திற்குச் சென்று, ஆலயத்தின் வடபாலுள்ள தீர்த்தத்திலாடி தேவியைப் பூசிக்க வேண்டும். அவள் உன் குறையைப் போக்கி யருள்வாள் என்று தாணுமாலையன் அருள்பாலித்தான்.

இந்திரன் தென்கோடிக் கரைக்குச்சென்று இந்திர காந்த விநாயகரைப் பிரதிஷ்டை செய்து பூசித்து, பஞ்சாக்கினியின் நடுவில் நின்று கடுந்தவஞ் செய்து வரம் வேண்டினான். இந்திரன் உடம்பிலுள்ள யோனிகளெல்லாம் கண்களாகக் காணும்படி இந்திரனுக்கு விநாயகர் அருள்பாலித்தார். அவன் புனிதனாகி, பொன்னுலகிற்கேகினான்.

அகத்தியருக்கருளிய அன்னை

உமையாள் - சிவன் திருமண நாளில் தேவர்கள் முனிவர்கள் எல்லோரும் இமயமலைக் கெழுந்தருளினார்கள். அதனால் வடபால் உயர்ந்து தென்பால் தாழ்ந்தது. சிவன் பூநிலையைச் சமன்செய்ய அகத்தியரைத் தென்பால் செல்லக் கட்டளை யிட்டருளினார். அவ்வேளை குறுமுனி சிவனை வணங்கி, 'திருமணக் கோல தரிசனம் எப்பொழுது கிட்டும்' என்று வேண்டினார். 'பொதிகை மலையில் யாம் எழுந்தருளிக் காட்சி வழங்குவோம்'என்று குறுமுனிக்கு குழலுமை பங்கன் கூறியருளினார்.

அகத்தியர் பொதிகை மலைக்குச் சென்றார். அவருக்குத் திருமணக் கோலக் காட்சி கிட்டவில்லை. குமரித் தலத்திற்குச் சென்று, தீர்த்தங்களிலாடி குகனுண்டேசுவரரைப் பூசித்தார். தேவியையும் பூசித்தார். குறுமுனிவருடைய பூசையைக் குமரித்தாய் ஏற்று, அவர் வேண்டியபடி பூநிலை சமனாகவும், கயிலைக்குச் சென்று வரவும் அருள்பாலித்தாள்.

அகத்தியர் வெள்ளியங்கிரிக்குச் சென்றார். மாதொரு பாகனை வணங்கித் துதித்தார். எம்பிரான், முனிவரிடத்தில் வருகைக்குரிய காரணத்தை வினவினார். குமரித் துறையில் மாலையேந்தி, கன்னியென்னும் பராசக்தி தவக்கோலத்துடன் நிற்கிறாள். அவளுக்கருள்புரிய வேண்டும் என்று முனிவர் விண்ணப்பித்தார். உமையொரு பாகன் முனிவருக்குப் பொதிகை மலையில் திருமணக் கோலக் காட்சியை வழங்கியருளினார்.

முனிவர் அக்காட்சியைக்கண்டு வணங்கித் துதித்துப் பூசிக்கக் கட்டளை தந்தருள வேண்டுமென்று சிவனிடம் விண்ணப்பித்தார். முனிவர் பூசைக்குரிய பொருள்களுடன் வந்தார். சிவனைக் காணாமல் திகைத்தார். அவரது திருவருள் திறத்தை வியந்து துதித்து நின்றார். பூசைக்குரிய பொருள்களுடன் குமரித் துறைக்குச் சென்று, குமரிப்பதியின் மேல்பால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, அருகிலுள்ள மலையில் தீர்த்தத்தையும் அமைத்து, சிவலிங்கத்தைப் பூசித்துத் தவஞ்செய்யலானார். குழலுமை பங்கன் குறுமுனியின் பூசையை ஏற்று காட்சி வழங்கினார். முனிவரது வேண்டுகோளின் படி 'லிங்கத்தில் எப்பொழுதும் எழுந்தருளி யிருந்து பூசித்தவர்களுக்கும், தீர்த்தமாடியவர்களுக்கும் அருள் பாலிப்போம்' என்றருளினர். சிவன் குமரிப்பதிக்



முக்கடல் முனை
(அரேபியன் கடல், இந்து மகாசமுத்திரம், வங்காள விரிகுடா)



ஸ்நான கட்டம்

கெழுந்தருளி, தேவியின் திருக்கோலத்தைக் கண்டு வியந்து, மீண்டும் அகத்தீசுரத்திற்கு எழுந்தருளி லிங்கத்தில் கோயில்கொண்டருளினர்.

மூர்த்தி விசேடம்

கன்னிநாயகியின் திருஅவதாரம்

விஷ்ணு காக்குங் கடவுள். அவர் கொண்ட திரு அவதாரங்கள் பல. சக்தி வடிவம் அவற்றுள் ஒன்று.

"சத்திபரை காளியுமை சண்டிகைப வானிசிவை
யுத்தமிமா றங்கை யுலகீன்ருள்—அத்தையருள்
வாலை புவனை மனேன்மணிச டாதாரி
சூலிமலை மானீச் சுரி

(நாமதீப நிகண்டு-19-ம் பாடல்)

இவை போன்ற பல பெயர்களும் அவளுக்குண்டு. அன்னம் கலை அவளுக்கமைந்த வாகனங்கள். அணிகள் பல வுடையாள். அசுரர்களை அழித்த தெய்வீக ஆயுதங்களையும் உடையாள். மூன்று உலகையுங் காக்கத் திருஅவதாரங்கள் எடுத்தவள். 'மாயாள்' என்பது அவளுடைய இயற்பெயர்.

கலியுகத்தில் பாவம் மிகுந்தது. அதைப் போக்க கங்கை ஆயிரம் முகங்களோடு கீழ்த்திசையில் காத்து வந்தாள். தருமத்தைக் காக்க விஷ்ணு நரசிங்க வடிவத்துடன் மேற்றிசையில் கோலங் கொண்டருளினர். சிவனும் விஷ்ணுவும் கோகன்னத்தில் கோயில் கொண்டார்கள். மாயாள் கன்னி என்னும் பெயர் தாங்கி தென் சமுத்திரக் கரையி லிருந்தாள். அசுரர்கள் தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்தினர்கள். பாதகச் செயல்கள் மலிந்தன. பாவமாகிய புருஷன் வலிமை பெற்ருன். தானஞ் சுருங்கியது. பூதேவி இவைகளைக் கண்டு

திகைத்தாள். துயரகல இந்திரனிடம் முறையிட்டாள். அசுரர்களை அழிக்கும் ஆற்றல் சக்கரதாரிக்கே அமைந்தது என இந்திரன் பூதேவியிடம் கூறியருளினன். இந்திரன், தேவர், சித்தர் முதலியோர்கள் திருமாலிடஞ் சென்று முறையிட்டார்கள். பூபாரந் தீர்க்க பலபத்திரனுகவும், கிருஷ்ணனுகவும் அவதாரங்கள் எடுப்போம் என்று அவர் அபயமருளினர்.

கஞ்சன் வஞ்சகம் நிறைந்தவன். சந்திரகுலத்தில் பிறந்தவன். படைவலியும், புயவலியுமுடையவன். தேவகி அவனுடைய தங்கை. தக்க பருவம் வந்ததும் வசுதேவனுக்கு அவளைத் திருமணஞ் செய்து கொடுத்தான். அவர்கள் புறப்பட விருந்த வேளையில், 'தேவகி வயிற்று எட்டாவது கருப்பத்தால் கஞ்சனழிவான்' என்ற தேவ வாக்கு வானில் எழுந்தது. அதைக் கேட்டு கஞ்சன் திகைத்தான். அவர்களுக்கு விலங்கு பூட்டி, சிறையிலிட்டுக் காத்து வந்தான்.

தேவகிக்குப் பிறக்கும் குழந்தைகளை யெல்லாம் கஞ்சன் கொன்று களித்தான். தேவகி ஏழாவது கருப்பமுற்ருள். அக்கரு குலையாதிருக்க மாயவன் திருவுள்ளங் கொண்டார். வசுதேவனது முதல் மனைவியான உரோகிணி வயிற்றில் அக்கரு இடம்பெற அருளினர். மாயவன் மாயக் கருப்பமாக தேவகி வயிற்றிலிடங் கொண்டார். தேவகி ஒரு தெய்வீக மகவைப் பெற்ருள். கஞ்சனது செயலுக்கேங்கினள். நடுநடுங்கினள். அவ்வேளையில் விஷ்ணு மூர்த்தியாகிய அம்மகவு தாய்தந்தையர்களைப் பார்த்து,

“ கண்ணொடு முகமுங் கையுங் கால்களுங் கமலம் போல
நண்ணுமக் குழவி பெற்ரோர் நளினவான் முகத்தை நோக்கித்

திண்ணிய நெஞ்சக் கஞ்சன் செகுப்பனென் றெண்ணி நீவி
ரெண்ணுறு துயரம் யாவும் விடுமினென் றியம்ப லுற்ற"

வேறு

ஊன்பயில் வேற்க ணுரோகிணி தன்பால்
யான்பெல பத்திர ராம-னெனப்பேர்
தான்புகல் வுற்றிட வாங்கு சனித்தேன்
வான்புகழ் நுங்கணும் வந்து பிறந்தேன்

(கன்னி-மூர்த்தி-80, 81-பாடல்கள்)

"கஞ்சன் மிஞ்சான் அஞ்சவேண்டாம். இரணியனை மாய்க்கத் தூணில் தோன்றினேன். பூமியைக் கவர்ந்து சென்ற அரக்கனை அழிக்க வராக அவதார மெடுத்தேன். மூவுலகங்களைக் காத்த மகாபலியைச் சிறையிட்டேன். தேவர்கள் உய்ய அசுரர்களை அழித்தேன். கஞ்சன் உயிரை வாங்குவது எளிது. காலந் தாழ்த்தாமல் என்னை ஆயர்பாடியில் அசோதையிடம் சேர்த்து விடுங்கள். என் தங்கையாகிய மாயவளை இங்கே எடுத்து வாருங்கள்" என்று கூறி, எம்பெருமான் ஒரு குழந்தையாகக் கிடந்தார்.

வசுதேவனது உள்ளத்தில் பல பல எண்ணங்கள் எழுந்தன. அம்மகவை எடுத்துக் கொண்டு ஆயர் பாடிக்கு வசுதேவன் விரைந்து சென்றான். தெய்வீக மகவை அசோதையின் அண்டையிற் கிடத்தினான். மாயவளை எடுத்து வந்து தேவகியிடம் சேர்த்தான். கஞ்சன் மகவு பிறந்த செய்தியை அறிந்தான். அங்கே விரைந்து சென்றான். பூமியிலடித்துக் கொல்வதற்காக அம்மகவின் கால்களைப் பிடித்துத் தூக்கினான். கஞ்சனது செயலைக் கண்ட அம்மகவு, "கஞ்சா என்றன் கால்களைப் பிடித்தனை! ஆதலால் இன்று மிஞ்சினை. இதற்குமுன் உன்னை யமனுலகிற்கனுப்பி யிருப்பேன்.

அவ்விதஞ் செய்தால் என்முன் பிறந்தவனுக்கு மாசு படைத்தவளாவேன். இவ்வேளை கொல்லாது விட்டேன் என்று கூறி, அவனுடைய மார்பில் மாயவள் காலால் உதைத்தாள். அவன் மூன்று யோசனை தூரத்தில் போய் விழுந்தான்.

மாயவள் ஆயுதங்களோடு ஆகாயத்தில் காட்சியளித்தாள். கஞ்சன் அக்காட்சியைக் கண்டு திகைத்தான். அஞ்சினன். "அந்தணர், மறைவழி நிற்பவர், பெண்கள், பசுக்கள், குழந்தைகள் முதலியவர்களைக் காக்கவும், கொடியவர்களை அழிக்கவும் பல அவதாரங்கள் எடுத்தோம். உன்னையும் மாய்க்க எழுந்த என்னை ஏன் துன்புறுத்தினை" என்ற தெய்வ வாக்கு ஆகாயத்தில் முழங்கியது. அதைக் கேட்ட கஞ்சனது உள்ளங் கலங்கியது. புத்தி தடுமாறியது. வசுதேவனையும் தேவகியையும் சிறையிலிருந்து விடுதலை செய்து, ஆசார உபசாரப்படி வடமதுரைக்கு அனுப்பி வைக்கக் கட்டளை யிட்டான். மாயவனருளால் வானவர்களது துயரகன்றது. அசுரர்கள் அழிந்தார்கள். தேவி தேவர்களுக்கு அபயமும் வரதமும் அருளினள். நான்கு கரங்களில் சங்கு சக்கரங்களைத் தாங்கினள். கௌத்துவ மணியை அணிந்தாள். இரத்தின கிரீடத்தை முடியிற் கொண்டாள். முத்தொழிலையும் மேற்கொண்டாள். மாய அரக்கர்களை மாய்க்க, கன்னிநாயகி என்னும் பெயர் தாங்கி, குமரித் துறையில் கோயில் கொண்டிருந்தாள்.

மாய அரக்கர்களின் மறைவு

மதுகயிடவர்

திருமால் திருப்பாற் கடலில் பள்ளிகொண்டருளினார். அவருடைய இரு செவிகளில் குறும்பி வளர்ந்தது.

அந்த அழுக்குப் பொருளில் மதுகையிடவர் தோன்றி னர். அவர்கள் புயவலி மிக்கவர். அவர்களுடன் மாறு படுவோர் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் எவரு மில்லே. ஆதலால் அவர்கள் செருக்கி வாழ்ந்தார்கள்.

மதுகையிடவர் பிரமனுடன் மாறுபட்டனர். பிரமன் அவர்களேக் கண்டஞ்சி, விஷ்ணுவைத் துதித்தான். அவ் வேளேயில் மதுகையிடவர் நித்திரையி லாழ்ந்திருந்தனர். பிரமன் விஷ்ணுவிடம் வேண்டிய வரத்தை அவர்கள் உணரவில்லே. அரக்கர்கள் பிரமனே அணுகி ஞர்கள். பிரமன் திகைத்தான். மாயா சக்தியைத் துதித் தான். அவள் சுயவடிவுடன் தோன்றி, பிரமனுக்கபய மருளிஞள். விஷ்ணு நித்திரையினின்றும் எழுந்து ஆயுதங்கள் தாங்கி அரக்கர்களுடன் போர் செய்தார். அவர்களே வெல்ல முடியவில்லே. விஷ்ணு வலியிழந்து பராசக்தியைத் துதித்தார்.

அவள் கருணேகூர்ந்து, விஷ்ணுவினுடைய மன தில் ஒரு உபாயத்தைத் தோற்றுவித்தருளிஞர். விஷ்ணு அரக்கர்களேப் பார்த்து "புரகாசுரன், நரகாசுரன், கேசி முதலியவர்களேவிட நீங்கள் வலிமை யுடையவர்கள். உங்களேப் பாராட்டுகிறேன். வேண்டிய வரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறி யருளிஞர். "எங்களேவிட வலிமை யுடையவர்களிடமே வேண்டும் வரங்களே நாங்கள் பெறுவோம். வேண்டும் வரங் களேப் பெற்றுக் கொள்ளுங்கள். நாங்கள் தருகிருேம்" என்று அவர்கள் செருக்கிஞல் கூறிஞர்கள். அம் மொழிகளேக் கேட்ட விஷ்ணு உள்ளம் மகிழ்ந்தது. "நீங்கள் இரண்டுபேரும் என்கையா லிறக்க வரம் வழங்க வேண்டும்" என்று விஷ்ணு அரக்கர்களிடங் கூறியருளிஞர். தண்ணீரற்ற இடத்தில் அவருடைய

கையால் கொல்ல அரக்கர்கள் விஷ்ணுவுக்கு வரமளித்தார்கள்; விஷ்ணு அவர்களைத் தொடையில் வைத்து சக்கராயுதத்தால் தலையை அறுத்துக் கொன்ருர்.

மகிடாசுரன்

மகிடன் எருமை முகத்தினன். சுரித்த கொம்புகளையுடையவன். தீயைக் கக்கும் கண்களை யுடையவன். பஞ்சாக்கினியில் நின்று கடுந்தவஞ் செய்தவன். பிரமனிடம் வரங்களைப் பெற்றவன். மலையைப் போன்ற உடம்புடையவன். தீய செயல்களுக் கிருப்பிடமானவன். எமனும், வடவாமுகாக்கினியும் மகிடனைக்கண் டஞ்சும். கொலைத்தொழிலைச் செய்பவன். மிக்க வலிமையுடையவன். பிரமனுடைய படைப்புகளை நாசஞ் செய்பவன். படைபலமும், புயபலமும் உடையவன். கடல்களைக் கலக்கும் கால்களை யுடையவன். மாயஞ் செய்வதில் வல்லவன்.

மகிடன் வானவர்களைத் துன்புறுத்தினுன். வானவர்கள் இந்திரனிடம் முறையிட்டார்கள். அதைக் கேட்ட இந்திரன் வெகுண்டெழுந்தான். போர் மூண்டது. வாயுவும், அக்கினியும், எமனும் அப்போரைக் கண்டஞ்சினுர்கள். ஆயுதந் தாங்கிப் பெரும்போர் செய்தார்கள். அவுணர் புறங்காட்டி ஓடினர். அமரர் வாகை சூடினர்.

மகிடன் வெகுண்டெழுந்தான். போர்க்கோலந் தாங்கினுன். போரில் தேவர்கள் வலியிழந்தார்கள். இந்திரன் மகிடனைத் தடுத்தான். மகிடன் நாணேசை எழுப்பினுன். அதைக்கேட்டு அண்டங்கள் நடுங்கின. தேவர்கள் அஞ்சினுர்கள். இந்திரன் நாணேசை செய்தான். அதைக்கேட்ட திக்கஜங்களின் செவிகள் செவி

டாயின. அசுரர் அஞ்சினர். இந்திரனுடைய வில் முறிந்தது. தண்டாயுதமேந்திப் போர் செய்தான். வானவர்கோனுக்கு மகிடனை வெல்ல முடியவில்லை. திகைத்தான். தேவர் சக்தியிழந்தனர். மகிடன் வானுலகிற்குத் தலைவனானான்.

சிவனும், விஷ்ணுவும் மேருமலையில் எழுந்தருளியிருந்தார்கள். இந்திரன் அவர்களிடஞ் சென்று வணங்கி, முப்புரங்களை எரித்தீர்கள். சலந்தரன், அந்தகாசுரன், இரணியன் முதலியவர்களை மாய்த்தீர்கள். விஷத்தையுண்டு, அமுதத்தை அமரர்களுக்களித்தீர்கள். உலகத்தைப் பாயாகச் சுருட்டிய அசுரனைக் கொன்றீர்கள். மகிடன் வானுலகைக் கைப்பற்றிக் கொண்டான். அவனுடன் போர்செய்து நாங்கள் வலியிழந்தோம். புகழை இழந்தோம். கரந்த வடிவத்துடன் வாழ்கின்றோம். அருளவேண்டும்" என்று வானவர்கோன் அவர்களிடம் விண்ணப்பித்தான்.

இந்திரனுடைய மொழியைக் கேட்ட அவர்களுடைய கண்கள் சிவந்தன. புருவம் வளைந்து கோடுபோல் எழுந்தது. தேவர்களிடமுள்ள ஒளியெல்லாம் திரண்டு அண்டமுகட்டை முட்டியது. தேவர்கள் சக்தியைக் கொடுத்தார்கள். பாற்கடல் முத்துமாலையைக் கொடுத்தது. தேவதச்சன் ஆயுதங்களைக் கொடுத்தான். இமய அரசன் சிங்க வாகனத்தை வழங்கினான். ஆதிசேடன் ரத்னாபரணத்தைக் கொடுத்தான். வருணன் வெற்றிச் சங்கை அளித்தான். சக்தி தன்னேரில்லாத பொலிவுடன் விளங்கினாள். ஆரவாரஞ் செய்தாள். அவ்வொலி யுகமுடிவு காலத்தில் எழும் ஒலியை ஒத்தது. அவுணர்கள் அதைக்-கண் டஞ்சினார்கள். மகிடன் வெகுண்டெழுந்தான். அவன் ரதம் பூமியைவிட

வலிமை யுள்ளது. அதில் சிங்கயாளிகள் பூட்டப்பட்டிருந்தன. ரதம் எட்டுதிசையிலும் இயங்கும் தன்மையுடையது. அது அண்டமுகடு வரையும் உயர்ந்தெழுந்தது. படைகள் சூழ மகிடன் தேரிலேறினுன். வைரக் கவசம், வெற்றி விருதுகளை மகிடன் தாங்கி யிருந்தான்.

சக்தி போர்க்கோலம் பூண்டெழுந்தாள். அவ்வேளை ரத்தமழை பெய்தது. வெள்ளிடிகள் விழுந்தன. தேவி கர்ஜித்தாள். அதைக்கேட்ட அவுணர்கள் தும்பைசூடி ஆயுதந் தாங்கிப் போர் செய்தார்கள். தேவியின் கண்களில் நெருப்புப் பொறிகள் எழுந்தன. அவள் மூச்சில் எண்ணுக் கடங்காத பூதகணங்கள் தோன்றின. பல-சங்குகளை முழங்கின. பறையடித்தன பல கணங்கள். சில ஆயுதந்தாங்கி அசுரப்படைகளை அழித்தன. போர்க்களத்தில் உடற்குறைகளாடின. பேய்களாடின. சிட்சுரன் என்ற அசுரன் மாயச் செயல்களைச் செய்தான். தேவி அவனை சூலத்தால் மாய்த்தாள். சாமரன் ஆர்த்தெழுந்தான். உக்கிரன் தேவியின் மீது அம்புமாரி பொழிந்தான். காரணன் சீறி யெழுந்தான். பூதகணங்கள் அவர்களை அழித்தன.

விலானன், உக்கிரவீரியன், உக்கிரமுகன் ஆகிய மூவரும் தேவியை வளைந்து கொண்டார்கள். துன்முகன், தூர்த்தன் இருவரும் ஆர்த்தெழுந்தார்கள். சூலத்தால் தேவி அவர்களை மாய்த்தாள். மகிடன் சீறியெழுந்தான். தேவி அவன் மீது கணைமாரி பொழிந்தாள். மகிடனுடைய தேர், ஆயுதங்கள் எல்லாம் தேவியின் கணைகளுக்கிரையாயின. சக்தியிழந்த மகிடன் ஒரு எருமைக்கடா வடிவந் தாங்கி, பூமியைக் கிழித்தான். கொம்பால் மலைகளைப் பொடியாக்கினுன். வாலால் கடலைக் கலக்கினுன். பூதகணங்களை உதைத்தான். மாயக் கடாவைத் தேவி மாய்த்தாள்.

மகிடன் சிங்க வடிவத்துடன் ஆர்த்தெழுந்தான். பூதகணங்களை எல்லாம் வலிகுலையச் செய்தான். சக்தி மாய சிங்கத்தை அழித்தாள். மகிடன் மலைபோன்ற ஒரு புருட வடிவந்தாங்கி வந்தான். தேவி அவன் மார்பைக் கணையால் பிளந்தாள். அவன் யானை வடிவந்தாங்கி வந்தான். வாளால் தேவி அவனையும் மாய்த்தாள். மகிடன் மீண்டும் கடா வடிவத்துடன் வந்து பூதகணங் களின் சக்தியைக் குலைத்தான். மலைகளைத் தூக்கி எறிந் தான். சக்தி சூலத்தால் அவன் கழுத்தில் குத்தினாள். மகிடன் பாதி கடாவடிவத்தோடும், பாதி அசுர வடிவத் துடனும் வந்து போர்செய்தான். தேவி அவனை வாளால் வீழ்த்தினாள். தேவி ஆர்த்தாள். அதைக் கண்ட பிரமன் முதலிய தேவர்கள் வேதவிதிப்படி பூசித் தனர். தேவி அவர்களுக்கு வரங்களருளினாள்.

மலைகளுள் சிறந்தது கயிலை. அது பெரியது. புண்ணியஞ் செய்தவர்களுக்கே அதைக் காண முடியும். அதன் உச்சியில் ஒரு கோயிலுண்டு. அது தேவதச்ச னால் ஆக்கப்பட்டது; சிவனும் உமையும் அங்கே எழுந் தருளி யிருந்தார்கள். மகிடனை மாய்த்த தேவி அங்கே சென்று உமையொரு பாகனைப் பூசித்து வரங்கள் வேண்டினாள். அவளுடைய பூசையை ஏற்று, சருவ சங்கார காலத்தில் உன்னுடன் கூடி கிரீடை செய்து மகிழ்ந்திருக்க அருள்பாலித்தோம். அதுவரையிலும் தென்கோடிக் கரையில் சத்தமாதர்க்ள் சூழ இலுப்பை மாலையை ஏந்தி, இடது கையைத் தொடையில் வைத்துத் தவஞ்செய்வாயாக. மண்ணுலகின் துயர் நீங்க வாணனை மாய்த்தருள். நீ தவஞ்செய்யுமிடம் கன்னிகா க்ஷேத் திரம் என வழங்கப்படுவதாக. ஞான வனத்தில் பிரமச் சாரியாக எழுந்தருளி யிருப்போம் என்று கூறி யருளி

ளூர். புட்பகாசி சிவனை வணங்கி விடைபெற்று குமரித் தலத்திற்குச் சென்று தவஞ்செய்யலானாள்.

அமரர்களுக்கபயம்

விப்ரசித்திக்கு சும்பன், நிசும்பன் என இருமக்கள் பிறந்தார்கள். விப்ரசித்தியையும், சும்பனையும், மூதேவி மாய்த்தாள். நிசும்பன் மிஞ்சினான். அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் உபசும்பன். உபசும்பனுடைய மகன் வாணன். வாணன் பிரமனிடம் வரங்களைப் பெற்றவன். அசுரர்களுக்கரசன். அவன் திக்குப் பாலகர், இந்திரன் முதலியவர்களுடன் போர் செய்து வாகை சூடியவன். மூன்று உலகங்களையும் அடக்கி யாண்டவன். அமரருலகை அவுணர்களுக் குரிமையாக்கியவன். தேவர்கள் பதவியிழந்து தவித்தார்கள். காடுமலைகளில் கரந்துறைந்தார்கள். அவுணர்களுடைய கொடுமைக்காற்ருது, இந்திரன் முதலிய தேவர்கள் வியாழ பகவானிடத்தில் முறையிட்டார்கள். ‘தென்கோடிக் கரையில் தேவி தவக்கோலத்துடனிருக்கிருள். அவளிடம் அபயமடைந்தால் உங்கள் துயரகலும். காலந் தாழ்த்தாமல் அங்கே சென்று தேவியை வழிபடுங்கள்’ என்று வியாழபகவான் அவர்களிடங் கூறியருளினுர்.

அவர்கள் வியாழ பகவானின் கட்டளைப்படி குமரித் தலத்திற்குச் சென்ருர்கள். வைகாசி மாதம் பௌர்ணமியில் தாணு தீர்த்தத்திலாடி சீபாதப்பாறையில் சத்த மாதர்கள் சூழ தவக்கோலத்துடனிருக்குங் கன்னிநாயகியைப் பூசித்து, “பக்தர்களுக்கருளும் பராபரையே! காத்தருளும் காத்தவளே! முத்தியருளும் மூவுலக நாயகி! எல்லாமறிந்தவளே! யாவுமானவளே! ஞானிகளுக்கின்பமளிக்கும் நாரணி! மதுசூதனன் தங்கையே!

ஞான சொரூபியே! மாய மகிடனை மாய்த்தவளே! வாணனால் வாட்டமுறுகின்றோம். விண்ணுலகை இழந்தோம். மண்ணுலகில் மறைந்து வாழ்கின்றோம் என்று வாழ்த்தி யேத்தி வரம்வேண்டி நின்றனர்". "அச்சம் ஒழிமின்! வாணனை மாய்த்தருள்வோம்" என தேவி யருள்பாலித்தாள்.

இளவேனிற்காலம் எழுந்தது. கன்னிநாயகி சத்த மாதர்கள் சூழ பூஞ்சோலைக்குச் செல்லத் திருவுள்ளங் கொண்டாள். தோழியர் அவளுக்குக் கோலஞ் செய்தார்கள். சத்தமாதர் வீணையை முழக்கினார்கள். பட்ட மரங்களும் அதைக்கேட்டுத் தளிர்த்தன. மலர்கள் தேனைச் சிந்தின. பூமாது கன்னிநாயகியைப் பூசித்து, "கற்பகச்சோலையை அழித்த வாணனது தலையை அறுத்தெறிய வேண்டும்" என வரம்வேண்டி நின்றனள். தேவி அவளது, பூசையை ஏற்றருளினாள்.

வாணனது வேவுகாரர்கள் பலர். அவர்களுள் துன்முகனும், தூர்த்தனும் குறிப்பிடத் தக்கவர். அவர்கள் மாயஞ் செய்வதில் வல்லவர்கள். அந்த அரக்கர்கள் அன்னையைக் கண்டார்கள். வாணன் மோகங் கொள்ளும்படி தேவியின் கட்டழகை அவர்கள் வருணித்தார்கள். வாணன் தேர்கொண்டு வரும்படி கட்டளை யிட்டான். வாணன் ஆகாயமுட்ட எழுந்த தலையும், சிவந்த தலைமுடியும், பாறைபோன்ற வக்கிர தந்தங்களையும், தீயைக்கக்கும் கண்களையுமுடையவன். உயிர்களை விழுங்கி வயிற்றி லடைக்கும் இயல்பினன். மலையைப் போன்ற புயங்களையும், நீண்ட கைகளையுமுடையவன். நீல நிறமுடையவன். பிரமனிடம் பல வரங்களையும் பெற்றவன்.

தீவினை தூண்ட கன்னிநாயகி எழுந்தருளி யிருக்குஞ் சோலைக்கு ஏகினான். சோலை வளத்தில் உள்ளத்

தைப் பறிகொடுத்தான். சத்தமாதர்களின் பாடலைக் கேட்டு உருகினன். கன்னிநாயகியை மனங்குளிரக் கண்குளிரக் கண்டான். காமத்தீயால் அவனுடல் கருகியது. மனமுருகினன். "இவள் உருப்பசியு மன்று. பேரின்ப வடிவமேயாகும். கற்பகச் சோலையிலுள்ள பறவைகள் எல்லாம் முழக்கி என்னைக் கொல்லுகின்றன. மறிகடலும் வாட்டுகிறது. எந்தத் தேவர்களாலும் என்னைக் கொல்ல முடியாது. மன்மத பாணம் என்னை மாய்க்காமல் போகாது" என்பன போன்ற எண்ணங்கள் வாணன் மனதில் எழுந்தன.

வாணன் தேவியிடஞ் சென்று அழகை எல்லாம் வருணித்தான். 'தவச்செல்வீ! உன்னைக் காண அரிய தவங்கள் செய்யவேண்டும். உனக்கு வேண்டிய பணிகளைச் செய்யக் காத்திருக்கிறேன். தேவர்களைப்போல என்னையும் எண்ணினையோ? என்னிடம் இல்லாத தொன்றில்லை. என் வலியைக் கண்டு எமனும் அஞ்சுவான். சிவனும் விஷ்ணுவும் பயந்து மலையிலும், கடலிலும் மறைந்து வாழ்கின்ருர்கள். இந்திரனும் என் ஏவல் கேட்டு வாழ்கின்ருன். மன்பத பாணத்தால் மாள்கின்றேன். காம வியாதிக்குரிய அவத்தைகள் பத்து. அவற்றுள் ஒன்பதும் வந்து போயின. மரணுவஸ்தை மட்டும் எஞ்சியுள்ளது. அது வந்தே தீரும். தந்திரமும் மந்திரமும் அதனிடம் பலிக்காது. படைபலத்தாலும், ஆயுதத்தாலும் அதைத் தடுக்க முடியாது. உன்றன் கடைக்கண்ணருளாலே அது அகலும். மூவுலகங்களிலுமுள்ள உரிமைகளை உனக்களிப்பேன். உன்றனடிகளை வணங்கி ஊழியங்கள் செய்வேன். உன்றனுடல் இளைத்துவிட்டது. அதனல் வரும் பயனென்ன? இளமையும் யௌவனமும் நிலைத்து நிற்பதில்லை. அவற்றை இழந்து விடாதே. விரும்பிய வரங்களைக்

கேள். தருகிறேன் என்று காமவெறியால் வாணன் உளறினன்.

"வாணு! வீணுக நீ வாணுளை யிழவாதே. தூண்டிலிற்பட்ட மீன்போல மாளாதே. மகளிர் மனமறியாது மையல் கொள்ளுவது முறையோ? அவர்களைத் தொட்டவர்களது ஆயுள் அழியும். மறுமைப் பயனை இழப்பார்கள்" என்று தேவி உரைத்தருளினுள். அம்மொழிகளைக் கேட்ட வாணன் பெருமூச்சு விட்டுக்கொண்டே, "தேவீ! உன்னை காந்தருவ முறைப்படி மணந்து பின்னர் வேத விதிப்படி விவாகஞ் செய்துகொள்வேன் என்று கூறினுன்.

வாணனது மொழிகளைக் கேட்ட கன்னிநாயகி, "வாணு! நீ எனக்கு வேண்டியவைகளை யெல்லாம் தருவதாகக் கூறினுய்.

பாடலங் கனியும் பாங்கர்ப் படரறு கதனி லுள்ள
நீடிய கனியுஞ் சீத நிழல்வட மரத்தின் பூவுங்
கோடுய ரத்திப் பூவுங் குலவிய வித்திப் பூவுந்
தேடிநீ கொணர்ந்தா லின்னுஞ் செப்புவான் சிறிது முண்டால்
சந்திர னிடத்து மற்றத் தாரகை யிடத்து முள்ள
வந்தநல் லரியுந் தேடு மாசை-மிக் குள்ளே னீதா
னிந்தநற் பொருள்க ளெல்லா மெனக் கிங்ஙன் கொணர்ந்து வல்லை
தந்திட வேண்டு மென்ருள் சகலமுந் தரவல் லாடான்.

கன்னி—வாணுசுர. 57, 58.

வாணன் ஆல், அறுகு, அத்திப்பூ, இத்திப்பூ, சந்திரன், நட்சத்திரம், ஒளி முதலியவைகளை யெல்லாம் மாயையினுல் கொண்டு வைத்தான். தேவி இமைக்கு முன் அவைகள் மறைந்து விட்டன. மாயை பொய்த்தமையைக் கண்டு அவன் மனமுடைந்தான்.

தேவியைக் கொல்ல வாணன் ஆரவாரித்து வாளை ஓங்கினன். தேவி அதை வெட்டி வீழ்த்தினள். அவள் வில்லை வளைத்து கணை மாரி பொழிந்தாள். ஆர்த்தெழுந்த அசுரப் படைகளை யெல்லாம் மாய்த்து தேவி வெற்றிச் சங்கை முழக்கினள். அவன் கன்னி நாயகியின் மீது தேவாஸ்திரங்களைப் பொழிந்தான். தேவியின் அக்கினி பாணங்களுக்கு அவைகள் இரையாயின. வாணன் மாயையினல் மறைந்தோட நினைத்தான். அவன் குறிப்பைத் தேவி உணர்ந்தாள். உடனே சக்கராயுதத்தை ஏவினள். அது அவனுடைய தலையை அறுத்துக் கடலில் எறிந்துவிட்டு, தேவியின் பாதத்தை வணங்கி, பூமியைக் கிழித்துக் கொண்டு பாதலத்திற் கேகியது. தேவியின் செயலைக் கண்டு தேவர்கள் ஆர்த்தெழுந்தனர். பூமாரி பொழிந்தனர். வாழ்த்தி ஏத்தினர். தேவி அவர்களுக்கு வரங்களருளி, தோழியர் சூழ தவஞ் செய்யலானள். அந்தச் சக்கரம் சென்ற இடம் ஒரு தீர்த்தமாக அமைந்தது. அதற்குச் சக்கர தீர்த்தம் என்று பெயர்.

தீர்த்தச் சிறப்பு

தென் கோடிக்கரையில் தீர்த்தங்கள் பல உள்ளன. சக்கர தீர்த்தம், பாவநாசம், காயத்திரி, சாவித்திரி, சரசோதி, கன்னியாகுமரி, கணேச தீர்த்தம், தாணு தீர்த்தம், வீம தீர்த்தம், பிதிர் தீர்த்தம், மாதுரு தீர்த்தம் ஆகிய பதினெரு தீர்த்தங்களும் தேவியின் சந்நதியின் வடக்கும் தெற்குமாக அமைந்துள்ளன.

வாணனை மாய்த்த அந்நாளில் தேவர், முனிவர், சித்தர், மருத்துவர், வசுக்கள், சத்தமாதர்கள், விசுவ தேவர்கள், பிதுர்க்கள் முதலியோர்கள் தேவியை வணங்கித் துதிபாட, வேண்டிய வரங்களைக் கேளுங்கள் என

தேவி கூறியருளினுள். எந்நாளும் இந்த இடத்திலிருந்து அடியார்களுக்கருள் செய்யவேண்டும். எங்கள் பெயர்களால் இவ்விடத்தில் தீர்த்தங்க ளமையவேண்டும் என்று அவர்கள் தேவியிடம் வேண்டினுர்கள்.

தேவி அவர்களைப் பார்த்து, "உங்கள் தீர்த்தங்களிலாடி, தான தருமங்கள் செய்து, பிண்டமிட்டுத் தர்ப்பணம் சிரார்த்தம் செய்தாலும், பிதுர்க்களை எண்ணி, ஏழு தடவை தீர்த்தமாடினுலும் நற்பேறு பெறுவர். குலந் தழைக்கும். கற்பகாலம் அங்கே வாழ்வார்கள். பிதிர் தினத்தில் மாதந்தோறும் தவருமல் ஒரு வருடம் ஆடினவர்கள் முத்தி பெறுவர். சாபங்கள், பாவங்கள் நீங்கும். நினைத்தவை கைகூடும்" என்று கூறினுள்.

பிரமாணி, மயேசுவரி, கவுமாரி, வீரி, வராகி, இந்திராணி, சாமுண்டி முதலிய சத்த மாதர்கள் பெயர்களாலும் தீர்த்தங்கள் உள்ளன. அவை பிதிர்தீர்த்தத்தின் பக்கம் உள்ளன. பாவிகளும் அதிலாடி நற்பேறு பெறுவர். நினைத்த காரியங் கைகூடும். முத்தியும் கிட்டும். பாவநாச தீர்த்தம் சிறந்தது. தேவியின் சந்நதியின் வடக்குப் பக்கமுள்ளது. இந்திரன் தினந் தோறும் பாவநாசத்திலாடி தேவியைப் பூசித்து வந்தான். தேவியருளால் பாவம் நீங்கப்பெற்று அவன் புனிதனுன். இந்திரனுடைய பாவத்தைப் போக்கியதால் 'பாவநாசம்' என்னும் பெயர் அந்தத் தீர்த்தத்திற் கமைவதாயிற்று. கொடிய பாவங்கள் செய்தவர்களும் அதிலாட புனிதத் தன்மையடைவர். முத்தியும் பெறுவர்.

கங்கை, யமுனை, சரசோதி ஆகிய மூன்றும் புண்ணிய நதிகள். இவைகளி லாடியவர்கள் பாவம் நீங்கப் பெறுவார்கள். பாவிகளுடைய பாவத்தை போக்கியருள் வதால், அவைகள் புனிதத் தன்மையை இழந்தன.

களங்கத்தைப் போக்க விரும்பி, குமரிப் பதிக்குச் சென்று, கன்னிகா தீர்த்தத்தின் வடபால் தீர்த்த வடிவமாக அவைகள் தவஞ்செய்து வரம் வேண்டின. அவைகளின் பாவம் அகலவும், அவைகளின் பெயரால் தீர்த்தங்கள் அமையவும் தேவி அருள்பாலித்தாள். இந்தத் தீர்த்தங் களி லாடியவர்கள் காரிய சித்தியும் வீடும் பெறுவர்.

பாண்டவர் நாடிழந்து காட்டில் வாழ்ந்தனர். ஒரு நாள் பீமன் தருமரைப் பார்த்து, 'சூதாடிய உன்றன் கையை நெருப்புப் பற்ருதோ' என்று இகழ்ந்து கூறினுன். அதனுல் வீமன் துன்பத்திற் காளாஞன். வீமனது துன்பத்தைப் போக்க தருமர் விரும்பினுர். தவுமிய முனிவரிடம் உபாயத்தைக் கேட்டார். அவருடைய கட்டளைப்படி வீமன் குமரிப் பதிக்குச் சென்று, தீர்த்தமாடி கன்னி நாயகியைப் பூசித்து வரம்வேண்டினுன். அவளருளால் வீமன் பாவம் நீங்கப் பெற்ருன். அன்று முதல் தேவி தீர்த்தத்திற்கு வீம தீர்த்தம் என்னும் பெயர் அமைவதாயிற்று.

கன்னிகா தீர்த்தம் சந்நதியின் முன்னுள்ளது. தீர்த்தங்களிற் சிறந்தது. உலகிலுள்ள எல்லா தீர்த்தங் களும் இதில் சங்கமமாகும். இதிலாடியவர் எல்லாப் பேறும் பெறுவர். அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்கள் நீங்கப்பெறுவர். சுசிந்தைத் தாணு மாலையனுக்கு அபிடேகஞ் செய்த தீர்த்தம், சிவனுடைய சடையிலுள்ள கங்கையுடன் கலந்து, பாதல வாகினியாக வீம தீர்த்தத்தின் மேற்குப் பக்கமுள்ள சக்கரமலையின் அருகில் கலக்கும். கன்னி நாயகி அதிலாடுவாள். அகத்தியர் முதலிய ரிஷிகளும் ஆடுந்தன்மையுடையது. இந்தத் தீர்த்தத்தி லாடுவோர் எல்லாப் பேறுகளும் பெறுவர்.

பரசுராமன் சத்திரியர்களை வென்ருன். யாகங்கள் செய்து, பெற்ற பூமியைத் தானங் கொடுத்தான். தானம்



விவேகானந்தர் பாறை



கோவிலும் ஸ்நான கட்ட மண்டபமும்

வழங்கிய பூமியில் இருக்கலாகாதென் றுணர்ந்தான். வருணனை வேண்டித் தவமிருந்தான். மழுவெறிந்து ஒரு யோசனை நிலத்தைப் பெற்றான். குமரித் துறையில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்து பூசித்து, கடல் கரை கடவாதிருக்கவும், எம்பிரான் எப்பொழுதும் அவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கவும், அங்கே ஆடியவர் இட்ட சித்தியும் முத்தியும் பெற அருளுமாறு வேண்டி வரங்களைப் பெற்றான். அன்று முதல் சந்நதியின் முன்னுள்ளது கணேச தீர்த்தம் என வழங்கலாயிற்று. தேவியின் வேண்டுதலின்படி பிலத்தினின்றும் ஒரு சக்கரம் வந்தது. அந்த இடம் சக்கர தீர்த்தமாக அமையும்படி தேவி அருளினாள். இதிலாடியவர் முத்தி பெறுவர்.

தீர்த்தங்களிலாட விரும்புவோர்கள் விதிப்படி தீர்த்தம் கண்ணுக்குத் தெரியாத இடத்திற்குச் சென்று மலஜலங் கழித்து சுத்தி செய்ய வேண்டும். பின்னர் தீர்த்தத்தி லிறங்கவேண்டும். அதை வணங்கியாட வேண்டும். அதில் எச்சில் உமிழ்தலாகாது. ஆடிய பின் உடைகளைப் பிழிந்த கழிவு நீரை தீர்த்தத்தில் கழியச் செய்து அசுத்தப் படுத்தலாகாது. புனித ஆடை அணிந்து கொண்டு விசுவநாதரை வணங்க வேண்டும்.

பாவநாசத்திலாடி கடலிலாடும் வேளையில் சாவித்திரி, காயத்திரி, சரசோதி தீர்த்தங்களி லாடவேண்டும். பின்னர் சங்கற்பஞ்செய்து முறைப்படி தேவியை வணங்க வேண்டும்.

விநாயக தீர்த்தமாடுவோர் முதலில் விநாயகரை வணங்கி துயர்களைத் துடைத்தருள்க. பிழைகளைப் பொறுத்தருள்க என்று வணங்கிக் கடலிலாட வேண்டும். தாணுவை நினைத்து 'எண்ணியவற்றை அருளுக' என்று வேண்டி, தாணு தீர்த்தத்தி லாடவேண்டும். இந்

தத் தீர்த்தத்தி லாடியவர் சுசீந்திரத்திற்குச் சென்று தாணுமாலையனை வணங்க வேண்டும். இம்முறைப்படி வீம, மாதுர், பிதிர் தீர்த்தங்களி லாடவேண்டும். பின்னர் தருப்பணம், பிண்டம், சிரார்த்தம் முதலியன செய்து தேவியை வணங்கினவர்கள் பாவங்கள் நீங்கப் பெறுவர். குமரி மான்மியத்தை ஆலயங்களில் வைத்துக் கேட்க வேண்டும். அவ்விதம் கேட்டவர்கள் அடியிற் கூறப் படும் பேறுகளைப் பெற்றுய்வார்கள்.

திருநகர்க் குமரித் தலவிசே டத்தைச்
  சிந்தையில் விருப்புறக் கேட்டோ
ரிருநிதிக் குபேர னெனத்தனம் படைத்தே
  யிதமுறு புதல்வர்க ளில்லாண்
மருவிய சுற்றத் தொடுமினி திருந்து
  மனத்தினி னினைந்தவை யடைந்து
பெருகிய வளத்தோ டிருப்பர்பின் னெவரும்
  பெறலருங் கதியினைப் பெறுவார்.

கன்னி—வினவிடை 25.
